விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 176 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 239 புதன்கிழமை (12.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 13ஆவது திருத்தத்தை அமுலாக்கும் சஜித்தின் தீர்மானத்துக்கு ஆதரவளியுங்கள்

### அரசிடம் கரு ஜயசூரிய வலியுறுத்து



(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான சஜித்தின் தீர்மானம் குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடய 15



யாழ்.விஜயம் செய்துள்ள ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க, நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் கலாநிதி ஆறு.திருமுருகனுடன் சந்தித்து கலந்துரையாடியபோது...

## வட்டுக்கோட்டையில் வாள்வெட்டு

### இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, துணவி பகுதியில், வன்முறை கும்பல் ஒன்றின் வாள்வெட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் 15

## தேசிய இனப் பிரச்சினைக்கு

# புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப்பட வேண்டும்

### யாழில் ஜே.வி.பி தலைவர் அநுர குமார

(யாழ்ப்பாணம்)

தேசிய இனப் பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க, தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தின் கீழ் அமைந்த மாகாண சபை முறைமையில் தீர்வு இல்லை என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## நாளை முதல் தபாலகங்கள் மூடப்படும்

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள அனைத்து தபால் நிலையங்களும் நாளை 13ஆம் திகதி காலை முதல் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் 13 ஆம் திகதி நள்ளிரவு 12 15

## 22 கிலோ கேரள கஞ்சா குருநகரில் மீட்பு



15

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் - சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் நான் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சைக்காக போட்டியிடுவேன் என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 15



## யாழில் இராணுவ வாகனம் மோ.சைக்கிள் விபத்து

### இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனமும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த, இராணுவத்தினருக்குச் சொந்த 15

## ஐ.எம்.எப்பின் 3ஆவது கடன்

### இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடன் தவணைக்கான கலந்துரையாடல் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைக்கான மூன்றாம் தவணை கடன் தொகையை வழங்கு 15

## அதிகாரப் பகிர்வு தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?

### அநுரவிடம் கேட்ட சித்தார்த்தன் எம்.பி



02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தலைமையிலான குழுவினர் இலங்கை தமிழரசுக் கட்சியினரை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பினையடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் இந்த சந்திப்பின்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு ஏற்ப தற்போதைய மாகாண சபை முறைமை, உள்ளவாறே கொண்டு செல்லப்பட வேண்டும்.

அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் கீழ் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் அளிக்கப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

எழுத்தளவில் மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டுள்ள இவ்வாறான விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டங்கள் அவசியமானதாகும்.

மாகாண சபை முறைமை என்பதே அதிகாரப் பகிர்வாகும். எனினும், 13 ஆவது திருத்தத்தின் கீழ் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே, அதற்கு அப்பால் சென்று தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகளை கண்டறிய வேண்டும்.

கடந்த காலங்களை பற்றி பேசுவதை விடுத்து, எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்புவதே எமது இலக்காகும்.

இறந்த காலம் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதால் எமக்கானதொரு எதிர்காலம் இல்லாமல் போய்விடும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

(ம-7,10,33)

## அதிகாரப்...

அதிகாரப் பகிர்வு தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசாநாயக்கவிடம் சித்தார்த்தன் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரான அநுர குமார திசாநாயக்கவுக்கும் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கந்தரோடையில் நடைபெற்றது.

இச் சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினரும் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினர் கௌதமன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

ஒன்றரை மணிநேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இச்சந்திப்பின்போது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக அதாவது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தங்களது கட்சி எடுத்துள்ள நிலைப்பாடு என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

ஆகவே அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டினை தமிழ் மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும் எனவும், இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு பிரதான பங்காளியாக தங்களது ஜே.வி.பி கட்சி செயற்பட்ட விடயத்தில் எம் மக்கள் மத்தியில் இன்றுவரை அதிருப்தி இருப்பதால் இவ் விடயத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுதியான நிலைப்பாட்டினை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில், உங்கள் கட்சி சம்பந்தமான தமிழ் மக்களது மனநிலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் தலைவர் சித்தார்த்தன் தெளிவுபடுத்தினார்.

அதேநேரத்தில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளோம். சமூக மட்ட அமைப்புக்களும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக நாங்கள் முழுமையாக அவருடனேயே செயற்படுவோம் என்பதையும் சித்தார்த்தன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து, ஜனாதிபதித்தேர்தல் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் காணப்படும் பிந்திய நிலைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, எதிர்காலத்திலும் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்வதெனவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-7,10)

## மூத்த சுதேச வைத்தியர் சுப்பிரமணியம் காலமானார்



(மாசார்பளை)

வடமராட்சி குடத்தனையை பிறப்பிடமாகவும் மாசார் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்த சுதேச வைத்திய நிபுணர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் நேற்று காலமானார்.

அவருக்கு வயது 90 பரம்பரை சித்த வைத்தியரான இவர் பளைப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு தனது சேவையை சிறப்புற ஆற்றியவர், இவரது சேவையை பாராட்டி வட இலங்கை சுதேச வைத்திய சபையினரால் 2014 ஆம் ஆண்டு வைத்திய சக்கரவர்த்தி விருதும் பச்சிலைப்பள்ளி கலாசார பேரவையால் 2012 இல் கலைத்தென்றல் விருதும் பச்சிலைப் பள்ளிபிரதேச சபையால் பல்துறை கலைஞர் விருதும் நூலக நிறுவனத்தினரால் 2020 ஆம் ஆண்டு ஆவணப்படுத்தலுக்கான மதிப்பளிப்பும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,10)


கிழவன்காடு கலாமன்றத்தின்
கண்ணீர்ப் பூக்கள்

எமது கலாமன்றத்தின் உபதலைவரான
திரு. சபாரத்தினம் இராசநாயகம்
அவர்களின் பாசமிகு சகோதரர்

அமரர் சபாரத்தினம் குணநாயகம்
(குணம் மாஸ்ரர்)



அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரது
ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்து
சிதம்பர தில்லைக்கூத்தன்
திருவடிகளில் சேரப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

(1850-C)

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ். கிளை



பாராட்டி
வாழ்த்துகின்றோம்



Congratulations

பாலச்சந்திரன் பானுஜா

மாவட்ட நிலை - 7
தேசிய நிலை - 747
வணிகப்பிரிவு - 2AB


யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை

கடந்த வருடம் (2023 ஆம் ஆண்டு நடைபெற்ற G.C.E க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வணிகத்துறையில் யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பருத்தித்துறையிலிருந்து தோற்றி 2AB சித்தியினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தமையினையிட்டு மன மகிழ்வுடன் மனதார வாழ்த்துகின்றோம். மேலும் கல்வியில் சிறந்து விளங்கிட அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
வடமராட்சி ஊடகத் துறையினர்



6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1947 — 09 — 13

மறைவு
2018 — 05 — 20

அமரர்
சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்)
கார் உரிமையாளர்
திதி : பூர்வபக்க ஷஷ்டி

எங்களின் இதய தெய்வமே!
ஆறாண்டுகள் சென்றாலும் – உம்
நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
என்றும் எங்களுடன் இதயத்தில் வாழ்கின்றீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்

(0095)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்னாலையில்
# சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட பொலிஸார்
## மூன்று பசு மாடுகள் உயிருடன் மீட்பு

(சாவகச்சேரி)

**பருத்தித்துறை-துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார் இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளை நேற்று செவ்வாய்க்கிழமை காலை வேளையில் உயிருடன் மீட்டுள்ளனர்.**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீண்ட தேடுதலுக்கு மத்தியில் பொலிஸார் மேற்படி சட்டவிரோத கொல்களத்தை கண்டு பிடித்துள்ளனர்.

இதன்போது சாவகச்சேரி-மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஒரு மாட்டினை பொலிஸார் மீட்டதுடன் ஏனைய இரண்டு மாடுகள் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமராக்கப்பட்டு வருகின்றது. அதேவேளையில் மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஏனைய மாடுகள் இறைச்சியாக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த சுற்றிவளைப்பின் போது மூன்று பசு மாடுகள் மீட்கப்பட்டதுடன் பசு மாடுகளை கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றுடன் பிரதான சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் வழிகாட்டதலின் கீழ் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பாலித செனவிரட்ன தலைமையில், மேற்படி மீட்பு நடவடிக் கையை முன்னெடுக்கப்பட்டது. (நி-30-33)

# நாகபூசணி அம்மனை தரிசித்தார் சஜித்




(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இரு நாட்களாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டு வருகின்றார்.

இதன்படி அவர் நேற்று செவ்வாய்க்கிழமை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்து விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச் சந்திரா பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்களும் கலந்துகொண்டனர். (நி-33)

# அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றிச் சென்றவர்கள் கைது



(சாவகச்சேரி)

உரிய அனுமதிப்பத்திரம் இன்றியும் மாடுகளை சித்திரவதைக்குள்ளாக்கும் விதத்திலும் அதிக மாடுகளை சிறிய பட்டா வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது சிறிய வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 4 பெரிய மாடுகள் மற்றும் இரண்டு கன்றுகளையும் புத்தூர்ச் சந்திப் பகுதியில் வைத்து மீட்ட சாவகச்சேரிப் பொலிஸார் வாகனத்தையும் அதில் பயணித்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்ட மாடுகளே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (நி-30)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் மண்டபத்தில் தலைவர் ஆ.உதய சங்கர் தலைமையில் நடைபெற உள்ளது. யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாச எல்லைக்குட்பட்ட அனைத்து அங்கத்தவர்களும் தமது சிகை அலங்கரிப்பு நிலையங்களை முழுமையாக அன்றைய தினம் மூடி கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொள்ளுமாறு தலைவர் ஆ.உதய சங்கர் அறிவித்துள்ளார். (நி)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வக விருந்தினர் இல்லத்திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். வாழ் வகத்தின் வாழ்நாள் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் விருந்தினர் இல்லத்தினை திறந்து வைப்பார். (நி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலக தகவல் விஞ்ஞான துறையினர் எதிர்நோக்கும் சாவல்களை சீர்செய்யும் நோக்குடன் இத்துறையில் கடமையாற்றுபவர்களையும், நூலக துறையில் ஆர்வம் கொண்டு அதனைக் கற்றுக்கொண்டு இருப்பவர்களையும், நூலக அபிவிருத்தியில் அக்கறை கொண்டுள்ளவர்களையும் இணைத்து செயற்படுவதற்கு நூலக தகவல் விஞ்ஞான துறைசார் அமைப்பொன்றினை உருவாக்கும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பொதுசன நூலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். (நி)

# ஜூலை மாதம் முதல்
## நெடுந்தாரகைப் படகு சேவையில்

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் நெடுந்தாரகை படகு சேவைக்கு திரும்பவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நெடுந்தீவுக்கான படகுப் போக்குவரத்து மார்க்கங்களில் பிரதானமாக நெடுந்தாரகையும் ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த நிலையில் நெடுந்தாரகை திருத்தப்பணிகளுக்காக திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு திருத்தப் பணிகளும் ஆரம்பமாகி இருந்தன. இவை முடிவுற்று அடுத்த மாதம் படகு பணிக்குத் திரும்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த இதேவேளை நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவையை குமுதினி மற்றும் வடதாரகை என்பன வழங்கி வருகின்றன.

மேலும் நெடுந்தாரகைப் படகு சேவைக்குத் திரும்பும் பொழுது வடதாரகை சோதனை நடவடிக்கைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (நி)

# கிராம உத்தியோகத்தர்களுக்கான அறிமுகப்பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 65 கிராம உத்தியோகத்தர்களுக்கான அறிமுகப்பயிற்சி வகுப்பானது உதவி மாவட்ட செயலாளர் செல்வி.உ. தர்சினி தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமென நியமிக்கப்பட்டுள்ள இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஜூலை மாதம் 2 ஆம் திகதி வரை 15 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (நி-33)

# வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி விழா இன்று பிற்பகல் 1.45 மணிக்கு யா/வேலணை மத்திய கல்லூரியில் வேலணை பிரதேச சபை செயலாளர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் ப. பார்த்தீபன், சிறப்பு விருந்தினராக யா/ வேலணை மத்திய கல்லூரி அதிபர் இ.ஹஸ்ரன் றோய் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹட்ரிக் வெற்றியை ருசித்து சுப்பர்-8 இற்குள் நுழையுமா இந்தியா?



20 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஏ பிரிவில் இடம் பெற்றுள்ளது. பாகிஸ்தான், அயர்லாந்து அமெரிக்கா, கனடா ஆகிய அணிகளும் அந்த பிரிவில் உள்ளன.

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் அயர்லாந்தை 8 விக்கெட் வித்தியாசத்தில் எளிதில் வீழ்த்தியது. 2 ஆவது போட்டியில் பாகிஸ்தானை 6 ரன்னில் வென்றது.

இந்திய அணி 3 ஆவது ஆட்டத்தில் போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான அமெரிக்காவை இன்று எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி நியூயோர்க்கில் உள்ள நசாவு ஸ்டேடியத்தில் இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.


இந்திய அணி அமெரிக்காவை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றியுடன் சூப்பர்-8 சுற்றுக்கு நுழையும் ஆர்வத்தில் உள்ளது.

அயர்லாந்துக்கு எதிராக பட்டிங் மற்றும் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. பாகிஸ்தான் போட்டியில் பட்டிங் மிகவும் ஏமாற்றத்தை அளித்தது. ரிஷப் பண்ட் ஒருவரே தாக்கு பிடித்து ஆடினார். அபாரமான பந்துவீச்சால் வெற்றி கிடைத்தது. கிட்டத்தட்ட தோற்க வேண்டிய ஆட்டத்தில் வெற்றி அமைந்தது.

இந்தியாவை போலவே மோனக் படேல் தலைமையிலான அமெரிக்க அணியும் முதல் 2 ஆட்டத்தில் வெற்றி பெற்று உள்ளது. கனடாவை 7 விக்கெட் வித்தியாசத்திலும், பாகிஸ்தானை சூப்பர் ஓவரிலும் வீழ்த்தி இருந்தது. இந்தியாவுக்கு எல்லா வகையிலும் சவால் கொடுத்து அமெரிக்கா விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரோகித் சர்மா அணிக்கு அதிர்ச்சி கொடுத்து ஹாட்ரிக் வெற்றியை பெறும் வேட்கையில் அந்த அணி உள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3141

வந்தனா





நந்தினி





மதுஷா




வினோத்




மிலேஷ்




நிரோஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயை உண்டாக்கும் அழகுசாதனப் பொருட்கள்

**(கொழும்பு)**

**அழகுசாதனப் பொருட்களைக் கட்டுப்படுத்தாமை பாரிய சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சந்தையில் பதிவு செய்யப்படாத பல நிறுவனங்கள் இருப்பதாகவும் பாதரசம் போன்றவற்றை பயன்படுத்தி சில அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கப்படுவதால் அது தோல் புற்றுநோயை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைப் புள்ளிகள், முகம் சிவத்தல், முகப்பரு அனைத்தும் அழகுசாதனப் பொருட்களால் ஏற்படுவதாக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் இந்திரா கஹதவி தெரிவித்துள்ளார். (நி)

# மின் கட்டண திருத்த யோசனை

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பு

PUCSL

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை தமது மின் கட்டண திருத்த யோசனையை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வினவிய போது, குறித்த யோசனை தொடர்பில் விரைவில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் மின் கட்டணத்தை குறைக்க தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைவாக, ஏனைய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

# முன்னாள் எம்.பி சிவமோகன் பயணித்த வாகனம் விபத்து



(மட்டக்களப்பு)

சிவமோகன் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு-காத்தான்குடி பிரதான வீதியின் தளங்குடா பகுதியிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி மின்தூண் ஒன்றில் மோதுண்டுள்ளது.

விபத்து நேரும் சந்தர்ப்பத்தில் வாகனத்தில் சிவமோகன் உள்ளிட்ட மூவர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றதுடன் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 4 பில்லியன் டொலர் கடன்; உண்மைக்கு புறம்பான தகவல்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு


(கொழும்பு)

அரசாங்கம் குறுகிய காலப் பகுதியில் 4 பில்லியன் டொலர்கள் கடன் பெற்றுள்ளதாக தேசிய மக்கள் சக்தி முன் வைத்துள்ள கருத்தானது உண்மைக்கு புறம்பானது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "நாடு செலுத்த வேண்டிய கடன் தொகை அதிகரித்துள்ளதாக சிலர் கூறிவருகின்றனர்.

நாட்டுமக்கள் இது தொடர்பில் குழப்பமடைய தேவையில்லை. டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகின்றது. இது புதிதாக பெற்றுக் கொண்ட கடன் தொகை அல்ல.



ரூபாவின் பெறுமதியின் பிரகாரம் கடந்த மூன்று மாதங்களில் கடன் தொகை குறைவடைந்துள்ளது. இந்த எண்ணிக்கையானது டொலரின் பெறுமதியின் ஒப்பிடுகையில் அதிகமாக காணப்படுகின்றது.

இதனையே அரசாங்கம் குறுகிய காலப்பகுதியில் 4 பில்லியன் டொலர் கடன்பெற்றுள்ளதாக தேசிய மக்கள் சக்தியினர் கூறுகின்றனர்.

சர்வதேச நாணயநிதியத் திற்கு எமது வேலைத்திட்டம் தொடர்பில் நம்பிக்கை உள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் இவ்வாறான கூற்று தொடர்பில் சர்வதேச நாணயநிதியத்தின் வேலைத்திட்டத்தில் இடையூறு ஏற்படாது.

இந்த கூற்றில் எந்த வித உண்மைத் தன்மையும் இல்லை" என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பட்டிய தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

12. 06. 2024
வைகாசி 30, புதன்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.39 மணிவரை

மகம் பின்னிரவு 3.43 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம்-11.52-1.22 மணிவரை

சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம் - பூராடம்

**வளவன்**

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல் உங்களை விமர்சிக்கக் கூடும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகும், குடும்பத்தினரிடையே வீண் விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**ரிஷபம்** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், குடும்பச்சுமை கூடும், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல்நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு படுத்த முற்படுவீர்கள்.

நேற்றையை விட இன்று வளர்ந்தோம் என்ற நம்பிக்கையே வெற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி அறிவாற்றல் இலங்கையில் அதிகரிப்பு

## புள்ளி விபர திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

இந்த நாட்டில் கணனி அறிவாற்றல் 39 வீதமாக அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு கணனி கல்வியறிவு கணக்கெடுப்பு அறிக்கையின்படி, இலங்கையில் 5 முதல் 69 வயதுக்கு இடைப்பட்ட ஐந்தில் இருவர் கணினி அறிவு பெற்றவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐந்தில் மூன்று பேருக்கு டிஜிற்றல் கல்வியறிவு உள்ள நிலையில், அது 63.5 சதவீதமாகும் என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 20.2 வீதமான குடும்பங்கள் டெஸ்க்டாப் அல்லது மடிக்கணனிகளைப் பயன்படுத்துகின்ற நிலையில், நகர்ப்புற மக்களின் கணனி மற்றும் டிஜிட்டல் கல்வியறிவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டளவில், கணனி கல்வியறிவு 4.7 சதவிகிதம் அதிகரித்துள்ள நிலையில், நகர்ப்புறங்களில் அதிகபட்ச கணனி கல்வியறிவு 52.9 சதவிகிதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாணம் அதிக கணனி அறிவைப் பெற்றுள்ள அதேவேளை கிழக்கு மாகாணம் மிகக் குறைந்த கணினி அறிவைக் கொண்டுள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

## உயர்தர பரீட்சை பெறுபேறுகள்-2023

ஏழாலை மகாவித்தியாலயம்

கலைப்பிரிவு

ச.ஜம்சா-3ஏ, செ.அனுசியா-3ஏ, யோ.வினோஜிதா-2ஏபி,கா. சிவானுஜா-2ஏசி.

# விஜயதாசவின் தடை உத்தரவு மேலும் நீடிப்பு

(கொழும்பு)

விஜயதாச ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நியமிப்பதையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்படுவதைத்தடுத்தும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகச் செயற்படுவதற்கும் தடை விதித்து விதிக்கப்பட்ட தடை உத்தரவை மேலும் நீடிப்பதாக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த வழக்கில் உரிய ஆட்சேபனைகளை முன்வைக்க கால அவகாசம் வழங்குமாறு பிரதிவாதி நீதிமன்றத்திடம் கோரினார். அதையடுத்து, இந்த தடை உத்தரவை வரும் 25 ஆம் திகதி வரை நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகிய வண்ணவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)




| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 400 | 300-400 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 120-200 | 250 |
| தக்காளி | 500 | 500 | 450 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 150 | 140 | 100-120 | 200 |
| கோவா | 350 | 280 | 300 | 250 | 300 |
| கரட் | 350 | 350 | 450 | 400 | 500 |
| பூசணி | 140 | 150 | 140 | 150 | 150 |
| புடோல் | 300 | 300 | 150 | -- | 320 |
| வாழைக்காய் | 180 | 140 | 120 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 250 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 230 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 1200 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 220 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 550 | 500 | 350 | 400-600 | 550 |
| லீக்ஸ் | 650 | 660 | 650 | 400 | 700 |
| பீற்றூட் | 550 | 550 | 450 | 300 | 700 |
| கறிமிளகாய் | 600 | 500 | 250 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 400 | 200-400 | 650 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 350 | -- | 420 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 | 100-130 | 150 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 1000-1100 | 1300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 450 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 700 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 90 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 160 | 120 | 90 | 300 |

# மீன்பிடி புதிய சட்ட வரைபில்

## வெளிநாட்டுப் படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி

மீன்பிடி தொடர்பான புதிய சட்ட வரைபில் (1996 (2)) பிற நாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு இலங்கையின் கடற்பரப்பில் அனுமதி உரிமம் பெற்று மீன்பிடிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. ஆயினும் இழுவை மீன்பிடிக்கு அனுமதி இல்லை.

அத்தியாயம் ஒன்று பிரிவு (40) (1) இன் படி வெளிநாட்டு கொடி தாங்கிய கலன் உள்நாட்டில் மீன்பிடிக்கத் தடை எனக்கூறப்படுகிறது. ஆயினும் பிரிவு 40 (2) அமைச்சரின் அனுமதியுடன் பணிப்பாளர் தலைமை அதிபதி உரிய முறையில் விண்ணப்பங்களைப் பெற்று கலன்களுக்கு மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மற்றும் பிற நாட்டு மீனவர்கள் இவ் வரைபின் பிரகாரம் உரிமம் பெறமுடியும்.ஆனால் சட்டபூர்வமற்ற மீன் பிடி முறைகளில் ஒன்றான இழுவை மீன்பிடி வலைகளைப் பயன்படுத்த முடியாது. அத்தியாயம் (3) பிரிவு (85) பிரகாரம் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளைப் பயன்படுத்தி உள்நாட்டு கடற்பரப்பிலே இழுவை மடிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்திய மீனவர்கள் மீன்பிடிப்புக்காக உரிமம் இழுவை மடிகளுக்குப் பெற முடியாது. ஆகவே இழுவை மடிகளுக்கு இலங்கையின் கடற்பரப்பினுள் பயன்படுத்துவதை தவிர்ப்பது விரும்பத்தக்கது. மீறும் பட்சத்தில் அதற்கான தண்டனைகளை அனுபவிக்கவேண்டி வரும். பாகம் XI - மத்தியஸ்தம், நிர்வாகம் மற்றும் சட்ட நடவடிக்கைகள். என்ற பிரிவில் அத்தியாயம் 3 இல் சட்ட நடவடிக்கைகள், தவறுகள்,தண்டங்கள் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

இம் மாதம் 15 ஆம் திகதியுடன் வழமையான தமிழக அரசின் 45 நாட்கள் மீன்பிடித்தடை உத்தரவு காலாவதியாகின்றது. முடிந்தது தடைக் காலம் இனிமேல் துயர்க்காலம் என வடபகுதி மீனவர்கள் அச்சத்தில் உறைந்து உள்ளனர். தடை முடிவுற்றதும் மீண்டும் தொழிலில் ஈடுபடலாம். தமிழகப் படகுகள் வழமைபோல எவரது சொல்லையும் கேளாது அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடலாம். தமிழ்நாடு அரசு இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது அவசியம்.

மக்களவைத் தேர்தல் வெற்றி என்ற மமதையில் நடந்து கொள்வது ஆரோக்கியமானதாக இருக்காது. இலங்கை அரசும் இது விடயத்தில் உறுதியான நடவடிக்கை எடுப்பது அவசியம். இருப்பினும் நக்குண்டார் நாவிழந்தார் நிலையிலிருக்கும் அரசு இதிலிருந்து நழுவிச் செல்லும் போலவே தெரிகிறது. வடக்கிலுள்ள கடற்படையோ எல்லை தாண்டி கடல் வளங்களைச் சூறையாடிச் செல்லும் அந்நியப் படகுகளை கட்டுப்படுத்த முடியாத திராணியற்றுக் கிடக்கின்றது.

### சட்டவிரோத மீன்பிடிப்படகுகளை கடலில் மூழ்கடித்த அவுஸ்திரேலியா

கடந்தவாரம் அவுஸ்திரேலிய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நாற்பத்தியெட்டு இந்தோனேஷிய மீன்பிடிப்படகுகள் அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதுடன் ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்களையும் கைது செய்துள்ளதாக அவுஸ்திரேலிய கடல் எல்லைப் பாதுகாப்புப் படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அமைச்சு மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு இத்தகைய கொல்லைப்புறமாக அத்துமீறி கடல் வளங்களை சூறையாடுவது கடுமையான விடயம் எனவும், இவ்வாறு ஈடுபடும் படகுகளை எரித்து மூழ்கடிப்பதே தீர்வுக்கான ஒரே வழி எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் கொல்லைப்புறம் வழியாக வடபகுதியில் அத்துமீறி நுழைந்து சட்டபூர்வமற்ற இழுவை மடிகளைப் பயன்படுத்தி வளங்களை சூறையாடும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகவே செய்து வருகின்றனர். தடுத்துநிறுத்துவதற்கான ஜனநாயக வழியிலான சகல பொறிமுறைகளும் பிரயோகித்தாயிற்று.

ஆனாலும் அத்துமீறிய செயற்பாடுகளை இந்திய மீனவர்கள் நிறுத்துவதாக இல்லை. கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள படகுகளும், கைது செய்யப்படும் மீனவர்களும் இந்திய அரசின் அழுத்தம் காரணமாக இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டு வரும் செயற்பாடுகளே தொடர்கின்றன. விடுவிக்கப்படுவோர்கள் மீண்டும் அத்துமீறி மீன் வளங்களைச் சூறையாடி வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்த மேற்கொண்ட எத் தகைய எதிர்ப்பு போராட்டங்களையும் இந்திய மத்திய மாநில அரசுகள் கவனத்திற் கொள்ளாத நிலையே தொடர்கின்றன. வட பகுதி மீனவர்களின் அவல நிலை பற்றியோ சுற்றுச் சூழல் பாதிப்பு மற்றும் வள அழிவு மீன்பிடி சட்டவரைபுகளை மதிக்கும் பண்புகொண்டவர்களாக இருப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய அத்து மீறல்களை சர்வதேச நிறுவனங்களில் முறையிடுவதால் எந்தப்பயனுமில்லை என்பது காசா மற்றும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை சம்பவங்களில் அந்த நிறுவனங்கள் போடும் தப்புத் தாளங்கள் நிரூபித்துள்ளன. இலங்கையில் இவ்வாறான மூழ் கடிப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் இல்லை.

ஆனாலும் இந்த அத்து மீறிய செயற்பாடுகளை நிறுத்த அவுஸ்திரேலிய சுற்றுச்சூழல் அமைச்சு குறிப்பிடுவது போல் எல்லைதாண்டும் படகுகளை கைப்பற்றி அவற்றினை மூழ்கடித்து விடுவது தான்ஒரே வழி. இல்லையேல் இவர்களை கட்டுப்படுத்த முடியாது. என்பது எமது கருத்து. ஏனெனில் வளச் சூறையாடல் மட்டுமல்ல போதைவஸ்துக் கடத்தல்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எல்லை மீறிப் போயிருக்கிறது.

**கலாநிதி: சூசை ஆனந்தன்**
**ஓய்வுநிலை பேராசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையை நவம்பரில் நடத்த திட்டம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டிற் கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு ள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்துள்ளார்.


கல்வி அமைச்சினால் ஏற் பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

அத்துடன் 2025 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை செப்டெம்பர் மாதம் நடத்த முடியும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பிள்ளைகளின் நேரத்தை வீணடிப்பதைத் தடுப்பதற்காக பரீட்சை நிறை வடைந்தவுடன் உயர்தரக் கல்வி நடவடிக்கைகளை ஆரம் பித்துள்ளதாகவும் தெரிவித் தார்.

அத்துடன் பல்கலைக் கழக நுழைவை விரைவுபடுத்து வதற்கான உரிய நடவடிக் கைகளை மேற் கொண்டு வரு வதாகவும் அமைச்சர் தெரி வித்தமை குறிப்பிடத்தக் கது. (நி)

# ஹற்றன்-கொழும்பு வீதியில் விபத்து



(கொழும்பு)

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் வான் ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்துள்ள னர்

அதன்படி தியகல பகுதியில் வான் ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளா னதில் வானில் பயணித்த இரண்டு பேர் படுகாயம் அடைந் துள்ளதுடன் கினிகத்தேன மருத்துமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

கண்டியில் இருந்து ஹற் றனை நோக்கி பயணித்த தனி யார் பேருந்தும், ஹற்றனில் இருந்து கண்டி நோக்கி பய ணித்த வான் ஒன்றுமே இவ் வாறு விபத்துக்குள்ளாகியுள் ளன.

இதேவேளை, பேருந்துக் கும் வானுக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதோடு, குறித்த விபத்து காரணமாக ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந் தது.

மேலும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கினிகத்தேன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 9 நாட்களில் மட்டும் 879 டெங்கு நோயாளர்கள்

## டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தகவல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித் துள்ளது.

அந்த வகையில் கடந்த 9 நாட்களில் மாத்திரம் 879 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரி வித் துள் ளது. குறிப் பாக கடந்த மே மாதம் மாத்திரம் 2, 647 டெங்கு நோயா ளர்கள் பதிவு செய்யப்பட் டுள்ளதுடன் இந்த வருடத்தின் இது வரையான காலப் பகுதியில் 25 ,799 டெங்கு நோயாளர் கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. மேலும் அதிக ளவான நோயாளர்களாக 9 ஆயிரத்து 441 பேர் மேல் மாகாணத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் குறித்த காலப்பகுதியில் 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.இதனிடையே வெள்ளம் காரணமாக எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் சுகாதாரத்துறை யினர் தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1175)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719


WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# தமிழரசுக்கட்சி - அநுரகுமார சந்திப்பு

## சூடு பிடிக்கும் அரசியல் களம்



(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியினருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக் கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்றுக் காலை யாழில் நடை பெற்றது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய் துள்ள அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான குழுவினர் மாவை சேனாதிராசா தலைமையிலான தமிழரசுக் கட்சியினரை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியி லுள்ள தமிழரசுக் கட்சியின் தலை மை அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது பிரதானமாக ஜனாதி பதித் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைமைகள் பற்றி கலந் துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, துணைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், நிர்வாக செயலாளர் குலநாயகம், ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதே போன்று தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் அக் கட்சியின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்களான பிமல்ரத் நாயக்கா, இராமலிங்கம் சந்திரசேக ரன் உட்பட பலரும் கலந்து கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-33)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 16<br>உயரம் : 6<br>தகைமை/தொழில்:Bsc,Msc,Owner of Construction Firm(UK)<br>எதிர்பார்ப்பு:படித்த பட்டதாரி<br>தொ.இ: B/14598 | பிறப்பு-1991 -இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா: 14 1/2<br>உயரம் : 5'3"<br>தகைமை/ தொழில்:Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/7314 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம் :5'11"<br>தகைமை/தொழில்:Bsc,Msc,Work in Embassy<br>எதிர்பார்ப்பு-பட்டதாரி<br>தொ.இ: B/14600 | பிறப்பு-1995- இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 7 3/4<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்:Dipolma in Management Own Business<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/13925 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>உயரம் :5'3"<br>தகைமை/தொழில்: Bsc,Msc,PHD,Lecturer<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ:B/11225 | பிறப்பு-1996- இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: BA - திட்டமிடல்<br>எதிர்பார்ப்பு:அரச வேலை<br>தொ.இ: G/13927 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L,NVQ3,Ambulance Driver<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்,படித்த பெண்<br>தொ.இ: B/11486 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா:40<br>உயரம் : 5'2"<br>தகைமை/ தொழில்: Bsc,Medical Laboratory Technologist<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/13966 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வெப்ப அலையினால் ஒடிசாவில் 8 பேர் பலி

(டில்லி)

ஒடிசாவில் உச்சமடைந்து வரும் வெப்ப அலையினால் கடந்த 72 மணிநேரத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இதுவரை கண்டிராத வெப்ப அலையை தற்போது எதிர் நோக்கி வருகின்றது. குறிப்பாக வட இந்தியாவின் சில பகுதிகளில் கடந்த மே மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து கடுமையான வெப்பநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வட இந்தியாவின் பல நகரங்களில் வெப்பநிலை 45-50C இற்கு இடையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மே மாதம் வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களின் படி கடந்த மார்ச் முதல் மே வரையான காலப்பகுதியில் இந்தியா முழுவதும் வெப்பம் தொடர்பான நோய்களால் 60 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பிராணிகள் சந்தையி

## 1000 பிராணிகள்

(பாங்கொங்)

**தாய்லாந்தின் பாங்கொக் நகரில் உள்ள சட்டுசாக் என்ற பிராணிகள் விற்கும் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 1000 விலங்குகள் உயிரிழந்துள்ளன.**



தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சந்தைகளில் ஒன்றான சட்டுசாக்கில் நேற்று அதிகாலை குறித்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலும் இவ்விபத்தில் 100 கடைகள் சேதமடைந்துள்ளதாகவும், சுமார் 1000 பிராணிகள் தீயில் கருகி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த பிராணிகளில் நாய்கள், பூனைகள், பாம்புகள் மற்றும் பறவைகள் உள்ளிட்டவை அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்கசிவு காரணமாகவே

## போலியாக வடிவமைக்கப்பட்ட நீர்வீழ்ச்சி சீனாவின் கபடநாடகம் அம்பலம்



(பீஜிங்)

சீனாவின் மிக உயரமான நீர்வீழ்ச்சியில் இரகசியமாக குழாய் பதித்து அதில் இருந்து வரும் நீரை இயற்கையான அருவி என நம்பவைத்துள்ளார்கள் இதனை மலையேறுபவர் ஒருவர் கண்டுபிடித்ததை அடுத்து சீன அதிகாரிகள் மன்னிப்பு கேட்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

சீனாவில் உள்ள 1,024 அடி உயரமுள்ள யுண்டாய் மலை நீர்வீழ்ச்சிக்கு உலகம் முழுவதிலுமிருந்து பலர் வருகை தருகின்றனர், இந்த நீர்வீழ்ச்சி சீனாவின் ஹெனான் மாகாணத்தில் உள்ளது


சுமார் 314 மீற்றர் செங்குத்து வீழ்ச்சியுடன் ஆசியாவிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி என அழைக்கப்படும் இந்த நீர்வீழ்ச்சியில் தான் இது போல் நடந்துள்ளது

இது குறித்து பூங்கா நிர்வாகம் யுண்டாய் மலையின் அழகிய பகுதி ஏழு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கடந்த ஆண்டு வந்துள்ளார்கள், கோடை காலங்களில் வறண்டு தண்ணீர் இல்லாமல் போனால் பார்வையாளர்கள் ஏமாந்து செல்லகூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு என தெரிவித்துள்ளார்கள் (நி)

## மலாவியின் துணை ஜனாதிபதி பயணித்த விமானம் மாயம்

(லிலோங்வே)

மலாவியின் துணை ஜனாதிபதி சவுலோஸ் சிலிமா மற்றும் 9 பேர் பயணித்த விமானம் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.



மலாவி பாதுகாப்புப் படையின் விமானம் நேற்று முன்தினம் தலைநகர் லிலோங்வேயில் இருந்து புறப்பட்ட பின்னர் ராடார் அமைப்பிலிருந்து வெளியேறியதாகவும் தொடர்புடைய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

விமானம் Mzuzu சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க திட்டமிடப்பட்டிருந்துடன் விமானத்தை தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மலாவி ஜனாதிபதி லாசரஸ் சக்வேரா தெரிவித்தார்.

மேலும் படையினர் தொடர்ந்தும் தேடுதல்களை மேற்கொண்டு வருவதாகவும், விமானம் கண்டுபிடிக்கப்படும் வரை நடவடிக்கை தொடர வேண்டும் எனவும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (நி)

## இஸ்ரேல்-காசா போர் நிறுத்தம் அமெரிக்காவுக்கு ஐ.நா ஆதரவு

(ஜெனீவா)

இஸ்ரேல்-காசா போர் நிறுத்தத் திட்டத்தை ஆதரிக்கும் அமெரிக்காவின் முன்மொழிவுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை ஆதரவாக வாக்களித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையில் உள்ள 15 உறுப்பினர்களில் 14 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதுடன் ரஷ்யா வாக்களிக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முழுமையான போர் நிறுத்தம், ஹமாஸ் பணயக் கைதிகளை விடுவித்தல் மற்றும் இறந்த பணயக் கைதிகளின் உடல்களை மீளப் பெறுதல் போன்ற விடயங்களை அமெரிக்கா முன்மொழிந்துள்ளது


இஸ்ரேலியர்கள் குறித்த திட்டத்திற்கு ஒப்புக் கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்க முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை எனவும் சர்வதேச ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும் நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் முழுவதுமாக வெளியேறுவதற்கான உத்தரவாதத்தை ஹமாஸ் கோருவதற்கான வாய்ப்பு உள்ளதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவை அறிக்கையின் ஊடாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...யில் தீ விபத்து ...ள் உயிரிழப்பு



...யிரிழந்த ...னைகள். ...வைகள் ...ம் எனத் ...மாகவே

குறித்த தீ விபத்து இடம் பெற்றுள்ளதாகவும், இதில் மனிதர்கள் யாரும் உயிரி ழக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தையைப் பார்வையிட வார இறுதி நாட்களில் இரண்டு இலட் சத்திற்கும் அதிகமான சுற் றுலாப் பயணிகள் வருகை தருகின்றமை குறிப்பிடத் தக்கது. (நி)

## ஏமனில் படகு கவிழ்ந்து விபத்து 38 பேர் உயிரிழப்பு



(ஏமன்)

ஏமனில் புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட பலரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 38 பேர் உயிரிழந்துள்ள னர்.

ஆபிரிக்காவில் இருந்து வருகை தந்த புகலிடக் கோரிக்கையா ளர்களே இவ்வாறு உயி ரிழந்துள்ளனர் என அந் நாட்டு ஊடகங்கள் தெரி வித்துள்ளன.

ஏமனின் ஏடன் பகுதி யில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இதில் 78 பேர் காப்பாற்றப்பட் டுள்ளதுடன் 100 பேர் மாய மாகியுள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் மாய மானவர்களைத் தேடும் பணி இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடு கள் சபையின் கூற்றுப்படி, கடந்த ஆண்டு 97,000 புலம் பெயர்ந்தோர் ஆபி ரிக்காவின் கொம்பு பகுதி யில் இருந்து ஏமனுக்கு வந் துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி)

## காசா போர் விவகாரம்

## இஸ்ரேல் அமைச்சர் திடீர் இராஜினாமா

(காசா)

பாலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள காசா மீது இஸ்ரேல் படையினர் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தச் சண்டையில் பலியான வர்களின் எண்ணிக்கை 37 ஆயி ரத்தை நெருங்குகிறது. இந்த போரை உடனே நிறுத்த வேண் டும் என சர்வதேச நாடுகள் கோரிக்கை விடுத்து வந்தாலும் இஸ்ரேல் அதனைக்கண்டு கொள்ளவில்லை.

ஹமாஸை அழிக்கும் வரை போர் நீடிக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் நுசிரத் அக திகள் முகாமில் இஸ்ரேல் படை யினர் அதிரடித் தாக்குதல் நடத் தினார்கள். பொதுமக்கள் அதிகம் வசித்து வரும் சுரங்கப் பாதையில் இஸ்ரேல் பிணைக் கைதிகளை அடைத்து வைத்துள்ளதாக கூறி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. சரமாரியாக குண்டுகள் வீசிய திலும், துப்பாக்கியால் சுட்டத்திலும் 274 பேர் பரிதாபமாக இறந்தனர்.

இதில் 64 குழந்தைகள், 57 பெண்கள், 37 முதியவர்களும் அடங்குவர். இந்த தாக்குதலின் போது 4 பிணைக்கைதிகளை இஸ்ரேல் படையினர் பத்திரமாக மீட்டனர்.



தொடர்ந்து நீடித்து வரும் இந்தப் போரால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவுக்கும், இஸ்ரேல் போர் அமைச்சரவையில் பாதுகாப்புத்துறை அமைச் சராக இருந்து வரும் பென்னி காண்ட்சுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த சூழ்நிலையில் பென்னி காண்ட்ஸ் தனது மந்திரி பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறும் போது காசாவில் ஹமாசுக்கு எதிரான போரில் உண்மையான வெற்றியை நோக்கி முன்னேறுவதை பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு தடுக்கிறார். அதனால் நான் இன்று கனத்த இதயத் துடன் எனது பதவியை ராஜி னாமா செய்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் அமைச்சர் பென்னி காண்ட்ஸ் ராஜி னாமா செய்வதற்கு முன்பு பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு அவரைப் பதவியை விட்டு விலக வேண்டாம். போரை கைவிடுவதற்கான நேரம் இதுவல்ல. படைகள் சேர வேண்டிய நேரம் இது என்று கேட்டுக்கொண்டதாக தகவல்கள் வெளியாகி உள் ளன. அமைச்சர் பதவி விலக விய விவகாரம் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு பின் னடைவாக பார்க்கப்படுகி றது.

இதனால் ஆட்சிக்கு எந்த நெருக்கடியும் இல்லை என் றாலும் இந்த விவகாரம் இஸ்ரேலில் புயலை கிளப்பி இருக்கிறது. (நி)

## ஆலங்கட்டி மழையில் சிக்கி விமானத்தின் முன்பகுதி சேதம்



(வியன்னா)

ஒஸ்திரியா விமானச் சேவைக்குச் சொந்தமான ஏர்பஸ் ஏ320-200 என்ற விமானத்தின் முன்பகுதி மற்றும் ஜன்னல்கள் ஆலங் கட்டி மழையால் பலத்த சேதமடைந்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்த விமானம் ஸ்பெயினின் பால்மா டி மெனியோர்காவிலிருந்து ஒஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவிற்கு 173 பயணி கள் மற்றும் 6 பணியா ளர்களுடன் பயணித்துள் ளது.

அப்போது, இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழை யில் விமானம் சிக்கியுள் ளது.

இதன்போது, விமானத் தின் முன்பகுதி ஆலங்கட்டி மழையால் நொறுங்கி பலத்த சேதம் அடைந்த தோடு, விமானி அறையின் மேற்பகுதி வளைந்ததோடு, ஜன்னல்களிலுள்ள கண் ணாடியில் விரிசல் ஏற்பட் டுள்ளன.

ஆனால், மூன்று அடுக்கு களை கொண்டு பலப்படுத் தப்பட்ட ஜன்னல்களால் விமானத்திற்குள் ஆலங் கட்டி மழை ஊடுருவ வில்லை.

மணித்தியாலத்திற்கு நூற்றுக்கணக்கான மைல் கள் வேகத்தில் பயணிக்கும் போது ஆலங்கட்டி மழை அல்லது பிற கடினமான பொருட்களால் தாக்கப்பட் டால் உடைந்து போகாமல் இருப்பதை உறுதிப்படுத்த விமானத்தின் கண்ணா டிகள் சோதனைக்குட்படுத் தப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது

இந்நிலையில் சேதத்தை பொருட்படுத்தாமல் விமா னம் பத்திரமாக வியன் னாவில் தரையிறக்கப்பட் டுள்ளது. தற்போது விமா னத்தை தொழில்நுட்ப வல் லுநர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைத்தோட்டத்தில் நுண்ணுயிர் சூழகத்தின் பங்கு




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாம் வாழும் தேசம் பலவகையான நுண்ணுயிரிகளின் செயற்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதில் நுண்ணுயிர் சூழக மென்பது (Microbiome) ஒரு குறிப்பிட்ட வாழிடத்தில் உள்ளடங்கியிருக்கும் அனைத்து வகையான நுண்ணுயிரிகளை உள்ளடக்கியதாகும். நுண்ணுயிரிகள் இன்றி எமது இயக்கமும் முழுமைபெறாது. குறிப்பாக எமது குடல் நுண்ணுயிர் சூழகத்தில் (Gut Microbiome) கணக்கிலடங்காத நுண்ணுயிரிகள் காணப்படுகின்றன. குறிப்பாக பங்கசு, ஆர்க்கியே, பக்றீறியா,வைரசு என பலவகையான நுண்ணுயிரிகள் குடல் நுண்ணுயிர்சூழகத்தில் அதாவது விலங்குகளின் சமிபாட்டுத் தொகுதியில் காணப்படுகின்றன.

இவற்றின் இயக்கம் எமது உடற் சுகாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். குறிப்பாக இரப்பை குடலில் காணப்படும் அனைத்து நுண்ணங்கிகளின் பரம்பரையலகுகளின் சூழகத்தை இரப்பைகுடல் நுண்ணுயிர்சூழகம் என அழைப்பர். இவ்வாறான நுண்ணங்கிகள் சமநிலையில் காணப்படும் போது அது மனித சமிபாட்டுத் தொகுதியின் செயற்பாட்டை கட்டுறுதியாக பேணும். இந்த நுண்ணங்கி



களின் சமநிலை மாற்றமடையும் போது அல்லது சமநிலையிழக்கும் போது அது எம்மை நோய்வாய்ப்படும் நிலைக்கு இட்டுச் சென்று விடும்.நாம் அள்ளித் திணிக்கும் அத்துணை உணவுகளையும் சிறுகூறுகளாக்கி இரப்பையிலுள்ள நொதியங்களால் சமிபாடடையச் செய்து அதிலுள்ள ஊட்டச்சத்துக்களை எமது உடல் அகத்துறுஞ்ச நுண்ணங்கிகள் அதீத பாடுபடுகின்றன என்றால் வியப்பாக இருக்கின்றதா. அதனால் தான் எமதுஉணவைநாம் திட்டமிட்டு இவ்வாறான நன்மை தருகின்ற நுண்ணங்கிகளை அழிக்காது மாறாக அவற்றின் அனுசேபத்தை ஊக்குவித்து உணவினை இலகுவில் சமிபாட்டைய செய்வதோடு இந்தச் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக எமது உணவிலும் பல்வகைத் தன்மை அவசியம் இருக்க வேண்டும் என சிபார்சு செய்யப்படுகின்றது.

இதே நிலைமை எமது மனைத்தோட்டத்திலும் இருக்கின்றதென்பதனை நாம் ஓரளவுக்கு தெரிந்து வைத்திருந்தாலும் அனைவருக்கும் இது பற்றியதெளிவு இருக்கவேண்டுமென்பதற்காக இக் கட்டுரை மேற்கொண்டு அந்த தகவல்களை தொகுத்திருக்கின்றது. கொவிட் 19 இற்கு பின்பு அனைத்து மனைகளிலும் பல்வகைத் தாவரங்களைக்கொண்ட மனைத் தோட்டங்கள் அமைக்கப்படுவதும் அவற்றைத் தொடர்ந்து பேணிப்பாதுகாப்பதும் கவனத்திலெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு நுண்ணங்கி உலகளாவியரீதியில் பரவி பலரது உயிர்களைக்காவு கொண்டதற்கப்பால் பலசெய்திகளை எமக்காக சொல்லிச் சென்றிருக்கின்றது. எமது நோயெதிர்ப்புத் தன்மையில் அவசியம் கவன மெடுக்கவேண்டும் என்னும் செய்திமிகப் பெரியது. உணவே மருந்து மருந்தே உணவு என்பதன் முழுமையான அர்த்தமும் அதுவே. நாம் உண்ணுகின்ற உணவு எமது உடலினது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மையுடையதாக எமக்கான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் கொடுக்கும் அட்சய பாத்திரமாக குறிப்பாக அன்ரிஒட்சின்களை தாராளமாக வழங்கும் தன்மையுடையதாக இருத்தல்வேண்டும்.

இதற்காகத்தான் அவசியம் எமதுஉணவில் பழங்கள் மற்றும் பச்சை இலைக் கறிவகைகள் சேர்க்கப்படவேண்டும் என முன்னோர்களும் எமது வைத்தியர்களும் பரிந்துரைக்கின்றார்கள். அன்ரிஒட்சின்கள் நோயெதிர்ப்புத் தன்மையை உடலில் அதிகரிக்கும் உந்து சக்தியாகும். நாளொருபச்சையிலைக் கறிவகை என ஏழு இலைக் கறிவகைகள் எமது மனையில் வளர்த்து நாம் உணவாக்கிக் கொள்ளலாம். அதனைத் தவிரமனைத் தோட்டத்தில் வளரும் பழமரங்களிலிருந்து எமக்குத் தேவையான பழங்களையும் நாம் உணவாக்கிக் கொள்ளலாம். இவை தவிர மூலிகைத் தாவரங்களையும் எமக்கான அளவில் வளர்த்து எமதுஉணவில் சேர்த்துக் கொள்ளலாம். இயற்கையாக எந்த இரசாயனமும் கலக்காது உற்பத்தி செய்யக் கூடிய இடமாக எமது மனைத் தோட்டம் அமைவதனால் அதில் நுண்ணங்கிகளின் தொழிற்பாடு எவ்வாறு ஊக்கியாக அமைந்திருக்கின்றது என்பதனை மேற்கொண்டுபார்ப்போம்.

மண் நுண்ணுயிர் சூழகத்தை (Soil microbiome) இதற்கு உதாரணமாக்கலாம். மண்ணுக்குள்ளே ஒளிந்திருக்கும் நுண்ணங்கிகளை அவற்றின் செயற்பாட்டைநாம் முழுமையாக பயன்படுத்தினால் நாம் வளர்க்கும் தாவரங்களுக்கு தேவையான ஊட்டச்சத்து அனைத்தையும் கொடுக்கலாம். ஒவ்வொரு தாவரத்திற்கும் தேவையான ஊட்டச்சத்துக்கள் வேறு வேறானவை எனவே தான் பல்வகை தாவரங்களை ஓரிடத்தில் நடுகைசெய்வதன் மூலம் அனைத்து தாவரங்களின் பெறுபேறுகளை நாம் இலகுவாக பெறமுடிகின்றது. இத்துடன் ஒருதாவரத்தின் வேர்த் தொகுதியில் வெளியிடப் படும் வேர்ச்சுரப்பு மற்றைய தாவ்ரத்துடன் வேறுபடுவத னாலும் வேர்ச்சுரப்புகளுக் கேற்ப நுண்ணங்கிகளின் மண்ணில் அனைத்து நுண்ணங்கிகளையும் பாதுகாக்க அவற்றின் வினைத்திறனை அதிகரிக்க பல்வகை தாவரங்களை நடுகை செய்து கொள்ளலாம்.

மனைத்தோட்டத்தில் தேவையானளவு சேதன உரத்தை அல்லது பசளையை பயன்படுத்துவதனால் மண்ணிலுள்ள நுண்ணங்கிகளுக்கானஉணவு இலகுவில் கிடைத்துவிடும். இதனால் பயன் தருநுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரிப்பதுடன் அவற்றின் பயன்பாடும் அதிகளவில் கிடைக்கின்றது.

மேலும் மனைத்தோட்டத்தில் குறைந்தளவு நில பண்படுத்தல் நடைபெறுவதால் நுண்ணங்கிகள் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றுடன் மூடுபடையாக சேதனப்பொருட்கள் பயன் படுத்தப் படுவதனால் மண்வளம் பேணப்படுகின்றது. மண்ணின் ஈரப்பதனும் தக்கவைக்கப்படுகின்றது. மேலும் பயிர்ச்சுழற்சி இலகுவாகமேற்கொள்ள முடியுமாதலால் தெரிவு செய்யப்படும் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்தில் இழப்பு ஏற்பட வாய்ப்பில்லை. இவற்றுடன் சேதன முறைபயிர்பாதுகாப்புமுறைகள் பயன்படுத்தப்படுவதனால் நுண்ணங்கிகள் அழிந்து போகாது தக்கவைக்கப்படுகின்றன.

மனைத்தோட்டத்தில் மண் நுண்ணுயிர் சூழகம் முழுமையாக பயன்படுத்தப்படுவதனாலும் அவற்றுக்கு அனுசரணையானசெய்கைகள் மேற் கொள்ளப்படுவதனாலும் நுண்ணங்கிகளின் பயன்பாடு வினைத்திறனாக பயன்படுத்தும் வழிகள் பலவுண்டு.

மண்நுண்ணுயிர்சூழகம் கழிவுமுகாமைத்துவத்திலும் ஏனைய பயிர்ச்செய்கை முறைகளிலும் பாதுகாக்கப்படுவதனால் அதன் பயன்பாட்டை மேலும் நாம் விருத்திசெய்து சிறந்த பயனைப் பெறலாம்.

# இன்று ஒரு தகவல் 150



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தாயின் பெருமை

கம்பர் ஒரு காவியம் எழுதினார். அது எவ்வளவு அழகானது என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமில்லையே? அவர் எழுதினதை எடுத்துச் சொல்லுகிற விதம் இருக்கு பாருங்க அது ஒரு தனி அழகு. கம்பராமாயண சொற்பொழிவிலே கேட்ட ஒரு விளக்கத்தைத் தான் இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

கம்பர் குறிப்பிட்டிருக்கின்ற ஒரு செய்தியை வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்று யூகித்து சொல்லியிருக்கிறார்கள். சீதா திருமணம் முடிகிறது. மண மண்டபத் திலே ஏகப்பட்ட கூட்டம். திருமணம் முடிந்தவுடன் மண மேடையிலேயிருந்து இராமர் எழுந்து வருகிறார். தொடர்ந்து சீதா பிராட்டியும் வருகிறார்.

கூட்டத்திலே இருந்தவர்களுக்கு எல்லாம் ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதிலே மிகவும் ஆர்வம். அதாவது சீதையைத் திருமணம் செய்து கொண்ட இராமர் யாரை முதலிலே வணங்கப் போகிறார். என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதிலே ஆர்வமாக ஆவலோடு காத்துக் கொண்டு இருந்தார்கள். சீதை பின் தொடர இராமர் மண மண்டபத்தை சுற்றி வந்து கொண்டு இருக்கிறார். தூரத்திலே தசரதர் உட்கார்ந்து இருந்தார். அந்தப் பக்கமாக இராமரும் சீதையும் போனார்கள்.

சரி... தசரதருக்கு முதல் நமஸ்காரம் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இவர்கள் நேராக அவரைத் தாண்டி அப்பாலே போகிறார்கள். அடுத்ததாக இருந்தது கோசலை. அந்தப் பக்கமாக இவர்கள் போய்க் கொண்டு இருந்தார்கள். ஓகோ... கோசலைக்குத் தான் முதல் வணக்கம் என்று நினைத்தார்கள். ஏன் என்றால் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" இதிலே "அன்னை" தானே முதலிலே வருகிறது! அதனாலே தாயாரைத்தான் முதலிலே வணங்க வேண்டும் என்று நினைக்கிறார் போல இருக்கு என்று நினைத்தார்கள். ஆனால் இவர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார்.

குலகுரு வசிட்டர் அடுத்ததாக இருந்தார். குரு வணக்கம் முதலிலே இருக்கிறது என்று நினைக்கிறார் போல இருக்கிறது என்று நினைத்தார்கள் எல்லோரும். அதுவும் தப்பாகப் போய் விட்டது. இராமர் வசிட்டரையம் வணங்காமலே தொடர்ந்து போகிறார். இதைப் பார்க்கிறார் விசுவாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்கிறார். அவர் முகத்திலே பெருமிதம். அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்ததே நான் தானே அதனாலே என்னிடம் முதலிலே ஆசீர்வாதம் வாங்கத் தான் இங்கே வருகிறார்கள் போல் இருக்கிறது என்று நினைத்தார் விசுவாமித்திரர்.

ஆனால் அவரும் ஏமாந்து விட்டார். அவரையும் தாண்டி அப்பால் போய்க்கொண்டு இருந்தார்கள். இராமனும் சீதையும் சரி, அப்படி என்றால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்க போகிறார்கள். தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டு இருந்தார். அவருடைய காலில் அவர்கள் விழுந்து வணங்கினார்கள். யார் அந்த அம்மா? அது தான் கையேயி. அவர் தான் ராமர் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருந்த கையேயி. கம்பர் தன்னுடைய ராமாயனத்திலே ராமன் கையே யியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டு இருக்கிறார். அதை மட்டும் வைத்துக்கொண்டு அங்கே என்ன நடந்து இருக்கும் என்பதை அழகாக படம் பிடித்துக் காட்டி இருக்கிறார். இந்தப் பேச்சாளர் இதற்கு ஒரு அர்த்தமும் சொல்லி இருக்கிறார்.

இது ராமன் கையேயியைப் பார்த்து இப்படி சொன்னது மாதிரி இருந்ததாம். எப்படி? என் அவதாரத்தின் ரகசியம் உனக்குத் தெரியும். சீதையை ராவணன் தூக்கி கொண்டுபோக வேண்டும். அதைக் காரணமாக வைத்து ராவண வதம் நடக்க வேண்டும். அதனாலே என் பங்கை நான் செய்து முடித்து விட்டேன். சீதையைக் திருமணம் செய்து கொண்டேன். இனி மேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும். எங்களைக் காட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு தான் உனக்கு முதல் வணக்கம் என்று சொல்லுகிற மாதிரி இருந்ததாம்.

எழுதிய ஒரு விடயத்தை எடுத்துச் சொல்லுகிற விதம் எப்படி அழகாக இருக்கிறது பார்த்தீர்களா? எனக்குத் தெரிந்த இரண்டு நண்பர்கள் இருக்கிறார்கள். இரண்டு பேரும் தனியாக ரூம் எடுத்து தங்கி சொந்தமாக சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறவர்கள். அதிலே ஒருதனுக்கு சமையல் தெரியும்.இன்னொருதனுக்கு திருமணம் நிச்சயமாகி விட்டது. அப்போது அவனைப் பார்த்து இவன் ஒரு கேள்வி கேட்டான். ஏன்டா உனக்கு திருமணம் முடிந்த உடனே முதல் நமஸ்காரம் யாருக்கு செய்யப்போகின்றாய். முதல் நமஸ்காரம் உனக்கு தான்டா என்றான் இவன். ஏன் அப்படி சொல்லுகின்றாய் என்று கேட்டான் இவன். நீ சமைச்சுப் போட்டதைக் கொஞ்சநாள் சாப்பிட்ட பிறகு சீக்கிரம் திருமணம் செய்து கொண்டால் நல்லது என்று தோன்றியது. நல்லவிதமாக சாப்பிடலாம் என்பதற்காக இந்த திருமணத்திற்கு காரண கர்த்தாவே நீ தான் அதனால் உனக்குத் தான் முதல் மரியாதை என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான புகையிரதக் கடவையாக புனரமைத்து தருமாறு கோரிக்கை

## இந்திராபுரம் மக்கள் கவனயீர்ப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட இந்திராபுரம் பிரதான வீதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையினை பாதுகாப்பான புகையிரதக் கடவையாக புனரமைத்து தருமாறு அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றினையும் நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

குறித்த பிரதேசத்தில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் குறித்த பிரதேசங்களில் வெடி பொருட்கள் அகற்றப்பட்டு வரு வதனால் மாற்றுவழிப்பாதை எதனையும் பயன்படுத்த முடி யாது உள்ளதாகவும் பிரதேச மக்கள் இவ்வீதியையே பயன்படுத்த வேண்டி இருப்பதாகவும் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

எனவே குறித்த பாதையை பாதுகாப்பான புகையிரதக் கடவையாக அமைத்துத் தரு மாறு கோரி இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது டன் புகையிரதத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகி யவற்றிற்கு மகஜர்களையும் கையளித்துள்ளனர்.(நி-315-316)

# இலவச குடிநீர் இணைப்பை பெறாதவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு

## முல்லைத்தீவு மக்களுக்கு அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் மாமூலை, கணுக்கேணி கிழக்கு, கணுக்கேணி மேற்கு கிராமங்களில் இதுவரை இலவச குடிநீர் இணைப்பை பெற்றுக்கொள்ளாத மக்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாமூலை , கணுக்கேணி கிழக்கு ,கணுக்கேணி மேற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களில் இதுவரை தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபையினால் வழங் கப்பட்ட இலவச குடிநீர் இணைப்பை பெற்றுக்கொள் ளாதவர்கள் 21.06.2024 இற்கு முன்னர் அலுவலகத் துடன் தொடர்பு கொண்டு இல வச நீர் இணைப்பை பெறு வதற்கான பதிவுகளை மேற் கொள்ளுமாறும் பதிவுகளுக் காக வருகை தரும் போது தேசிய அடையாள அட்டை, குடும்ப பதிவு அட்டை மற்றும் காணி தொடர்பான ஆவணங் களுடன் தங்களின் விபரங் களைப் பதிவு செய்து கொள் ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முல்லைத்தீவு காரி யாலயம் கோரியுள்ளது.

அத்துடன் மேற்படி பிர தேசங்களில் ஏற்கனவே பதிவு களை மேற்கொண்டு இது வரை நீர் இணைப்பை பெற்றுக் கொள்ளாதவர்களும் அலுவல கத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் பதிவுகளை மீள் உறுதி செய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ள னர்.

அத்தோடு 21.06.2024 ஆம் திகதிக்கு பின்னரான பதிவு களுக்கு இலவச குடிநீர் இணைப்பு எதிர்வரும் காலங்களில் வழங்கப்பட மாட்டாது என்பதையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துக்கொள் கிறது. (நி-350)

# பொலிஸ் வாகனத்தில் பாடசாலை சென்ற மாணவர்கள்



(முறிகண்டி)

பாடசாலை மாணவர் களை பேருந்துகள் ஏற்றாமல் சென்றதால் பொலிஸ் வாக னத்தில் மாணவர்கள் பாட சாலை சென்ற சம்பவம் பதி வாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தின் முகமாலைப் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்று ள்ளது.

பேருந்துகள் மாணவர் களை ஏற்றிச் செல்லாத சம் பவம் தொடர்ச்சியாகப் பதிவாகி வரும் நிலையில், நேற்று பொலிஸார் தமது வாகனத் தில் மாணவர்களை ஏற்றிச் சென்று பாடசாலையில் விட் டுள்ளனர்.

கடந்த சில மாதங்க ளிற்கு முன்னர், பெற்றோர் ஒருவர் பேருந்துக்கு குறுக்காக மோட்டர் சைக்கிளை நிறுத்தி பாடசாலை மாணவர்களை ஏற்றி அனுப்பிய சம்பவமும் குறித்த பகுதியில் இடம் பெற் றிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. (நி-100)

# நடைபவனி

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி யின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ் வுகளில் நடைபவனி எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

மீசாலை பழைய புகையிரத நிலை யத்திற்கு முன்பாக ஆரம்பித்து ஏ9 வீதி ஊடாக பாடசாலை வந்தடையும். இந்த நிகழ்ச்சியில் அனை வரையும் கலந்து சிறப் பிக்கும் வண்ணம் பாடசாலை சமூகம் வேண்டுகோள் விடுத் துள்ளது. (நி-26)



ஊரெழு கணேச வித்தியாசாலையில் கல்வி கற்கும் 118 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. L.O.L.C எனும் காப்புறுதி நிறுவனம் சக்தி தொலைக்காட்சி நிறுவன ஒருங்கிணைப்புடன் இவற்றை வழங்கியது.



மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவனான கனடா வைச் சேர்ந்த இராசதுரை ஜெயமுகானந்தன் அமரர். இராசதுரை ஜயசிவானந்தன் ஞாபகார்த்தமாக கல்லூரியில் அமைக்கப்பட்ட மைதான நுழைவாயில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.




செல்வம் தரும் கறுவா நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)



அனைத்துலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அண் மையில் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் முல் லைத்தீவு நகரப் பகுதியில் சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் செயற் பாடு முன்னெடுக்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் குழுக்கள் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(படம்-சுபேசன்)



மனிதநேயத்தை வலி யுறுத்தும் நோக்கில் வேள்ட் விசன் நிறுவன அனுசர ணையுடன் இதம் நிறுவன மானது இன்பக்ற் பிளஸ் (impact plus) கழக சிறார் களுடன் இணைந்து நடத் திய மாபெரும் தன்னார்வ இரத்ததான முகாம் கட ந்த ஞாயிற்றுக்கிழமை காலை கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை வளா கத்தில் இடம் பெற்றது.இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குரு திக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

(படம்-சுபேசன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 505





உடனே பழுவேட்டரையரும், "ஆம் தம்பி! பழைய கதை வேண்டாம்! உன் கதையைச் சொல்! காஞ்சியிலிருந்து எப்போது புறப்பட்டாய்? எங்கே பிரயாணம்? இங்கு இறங்கி வந்த காரணம் என்ன?" என்று கேட்டார்.

நந்தினியைப் பார்த்ததால் மதிமயங்கிப் போயிருந்த பார்த்திபேந்திரனும் தான் வந்த காரியத்தை நினைவு கூர்ந்தான்.

"ஐயா! என்னை மன்னிக்க வேண்டும்! ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டேன். மிக முக்கியமான செய்தியுடன் வந்திருக்கிறேன். சோழ நாட்டையே துயரக் கடலில் மூழ்கச் செய்யக்கூடிய பயங்கரமான செய்தி ஈழத்திலிருந்து என்னுடன் இந்தக் கப்பலில் புறப்பட்டு வந்த இளவரசர் அருள் மொழிவர்மர், சுழற் காற்று அடித்த சமயம் கடலில் குதித்து விட்டார். அவருடைய கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஒரு வேளை இங்கே வந்து ஒதுங்கினாரோ என்று பார்ப்பதற்கு வந்தேன்!" என்றான் பார்த்திபேந்திரன்.

அவன் கூறி முடிப்பதற்குள், "ஆகா! என்ன சொன்னாய்?" என்று பழுவேட்டரையர் அலறினார். சுழற் காற்றினால் வேருடன் பறிக்கப்பட்ட நெடுமரத்தைப் போல் தரையில் வீழ்ந்தார்.

அவரைத் தாங்கி எடுப்பதற்காகப் பார்த்திபேந்திரன் பாய்ந்து சென்றான். நந்தினி குறுக்கே நின்று அவன் நீட்டிய கையைப் பற்றி அகற்றினாள். பழுவேட்டரையரின் அருகில் தான் உட்கார்ந்து அவருடைய தலையைத் தன் மடியின் மீது எடுத்து வைத்துக் கொண்டாள்.

"தண்ணீர்! தண்ணீர்! என்று கத்தினாள்.

கூடாரத்திலிருந்து சேடிப் பெண் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள். இன்னும் சில வீரர்களும், கலங்கரை விளக்கக் காவலரும், அவர் குடும்பத்தாரும் ஓடி வந்தார்கள். நந்தினி மிக்க கம்பீரத்துடன் அவர்களையெல்லாம் அப்பால் நிற்கும்படி ஏவினாள். பழுவேட்டரையரின் முகத்தில் தண்ணீர் தெளித்தாள். "நாதா! நாதா!" என்று கொஞ்சும் குரலில் அழைத்தாள். சில நிமிடங்களுக்கெல்லாம் கிழவரின் கண்கள் திறந்தன. உடனே நினைவும் வந்தது. சட்டென்று எழுந்து உட்கார்ந்தார்.

"நந்தினி! சற்று முன் என் காதில் விழுந்தது உண்மையா? இந்தப் பல்லவன் என்ன சொன்னான்? பொன்னியின் செல்வனைக் கடல் கொண்டு விட்டதாகச் சொன்னான் அல்லவா? அந்த வீரகுமாரன் சின்னஞ்சிறு குழந்தையாயிருந்த போது இந்தக் கைகளால் அவனைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு மகிழ்ந்தேன். இதே கைகளினால் தான் அவனைச் சிறைப் பிடித்துக் கொண்டு வரும்படியான கட்டளையில் முத்திரை வைத்தேன். ஐயோ! சோழ நாடு என்னைப் பற்றி என்ன நினைக்கும்?" என்று பழுவேட்டரையர் தலையில் அடித்துக் கொண்டார். வயிரம் பாய்ந்த அந்த வீரக் கிழவர் அவ்விதம் மனம் கலங்கிப் புலம்பியதை அது வரையில் நந்தினி பார்த்ததில்லை. யாருமே கண்டதில்லை.

"நாதா! பதறாதீர்கள்! இவர் இன்னும் செய்தி முழுதும் சொல்லவில்லையே? முழுதும் கேட்டுவிட்டு மேலே செய்ய வேண்டியதைப் பற்றி யோசிப்பது நலம் அல்லவா?" என்றாள் நந் தினி.

"ஆமாம், நீ சொல்வது சரிதான். பார்த்திபேந்திரா! சீக்கிரம் சொல்! பொன்னியின் செல்வர் கடலில் முழுகி இறந்து விட்டார் என்று சொன்னாய் அல்லவா? அது உண்மையா? அல்லது ஏதோ துர்நோக்கத்துடன் கற்பனை செய்து சொல்கிறாயா? பசித்திருக்கும் புலியுடன் விளையாடாதே? ஜாக்கிரதை!" என்று அக்கிழவர் கண்களில் கனல் எழும்படி நோக்கிக் கர்ஜித்தார்.

"ஐயா! மன்னிக்க வேண்டும்! இளவரசர் இறந்து விட்டார் என்று நான் சொல்லவில்லை. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கஞ்சப்பிரபு

(நேற்றைய தொடர்ச்சி)

பிறகு அந்த இரும்பைத் தூக்கி உலைக் களத்தில் போட்டார். சக்கரத்தைச் சுற்றச் சுற்ற தீ கொழுந்துவிட்டு எரிந்தது. இரும்புத் துண்டு பழுக்கக் காய்ந்தது.

உதவியாளைப் பார்த்து ஏய்! பழுக்கக் காய்ந்த இந்த இரும்புத் துண்டை அந்த இரும்புக் கட்டையின் மேல் வை. இந்தப் பெரிய சுத்தியாலால் அதை அடித்துக் கூர்மையாக்கு. எவ்வளவு வலிமையாக அடிக்கிறாயோ அந்த அளவு கலப்பை உறுதியாக இருக்கும்," என்றார்.

உதவியாளும் அவர் சொன்னது போலப் பெரிய சுத்தியாலால் ஓங்கி அடித்துக் கொண்டிருந்தான். சின்னச் சுத்தியலுடன் அவரும் அவனுடன் சேர்ந்து இரும்புத் துண்டை அடித்தார்.



களைப்பு அடைந்த அவன் சுத்தி[illegible] அடிப்பதை நிறுத்தினான். "ஐயா! என்னால் முடியவில்லை," என்றான்.

உழவனைப் பார்த்து அவர், "இன்னும் சிறிது நேரம் சுத்தி[illegible] அடித்தால் [illegible] போதும். அது[illegible] கலப்பை கிடைக்கும் உதவி செய்," என்றார்.

பெரிய சுத்தியலை எடுத்தான் உழவன். அதனால் இரும்புத் துண்டை ஓங்கி அடிக்கத் தொடங்கினான். களைப்பு அடைந்த அவனும் அடிப்பதை நிறுத்தினான்.

நீண்ட நேரம் சுத்தியால் வலிமையாக அடித்ததால் இரும்புத் துண்டு சிறியதாகிவிட்டது. அதை மேலும் கீழும் புரட்டிப் பார்த்தார்.

உதட்டைப் பிதுக்கிய அவர், "என்ன இரும்புத்துண்டைக் கொண்டு வந்திருக்கிறாய். மட்டமான இரும்பு. இதில் கலப்பை செய்ய முடியாது. வேண்டுமானால் ஒரு கோடரி செய்து தருகிறேன். பல பரம்பரைக்குத் தொடர்ந்து அது உழைக்கும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். "சரி கோடரியே செய்து தாருங்கள், " என்றான் அவன்.

மீண்டும் அந்த இரும்புத் துண்டை உலைக் களத்தில் போட்டுத் தீ மூட்டினார் அவர். பழுக்கக் காய்ந்த அந்த இரும்பை உதவியாளும் அவரும் சேர்ந்து சுத்தியலால் அடித்தனர்.

சிறிது நேரம் சென்றது. அடிப்பதை நிறுத்திய அவர் இரும்புத் துண்டைப் பார்த்தார்.

மிகவும் சிறியதாக இருந்தது அது. "இதில் கோடரி செய்ய முடியாது. கூர்மையான அழகான சுத்தி செய்து தருகிறேன். இது போன்று வேலைப் பாடு அமைந்த சுத்தி யாரிடமும் இருக்க முடியாது. என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"ஏதாவது செய்யுங்கள்," என்று கடுப்புடன் சொன்னான் உழவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும். ~ *பிராங்க்லின்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்திய மத்திய அரசை வாலாஜப்படுத்துகிறார் ரணில்

நடந்து முடிந்த இந்தியப் பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது தடவையாகவும் நரேந்திர மோடி அவர்கள் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

பிரதமராகப் பதவியேற்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றியதன் மூலம் இந்திய மத்திய அரசை வாலாஜப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பது புரிதற்குரியது.

அதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க; மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் என உறுதிமொழி வழங்கியுள்ளார்.

இங்குதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக நுட்பமான முறையில் தனது கருத்தை முன்வைத்துள்ளார்.

அதாவது சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் ஆகிய துறைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

இஃது புதிய பொருளாதாரச் சட்டமூலத்தினூடாக மேற்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார்.

ஆக, மாகாண சபைகளுக்கான அதிகாரம் என்பது 13ஆவது திருத்தச் சட்டமூலத்தினூடாக வழங்கப்படும் எனக் கூறப்படவில்லை.

அவ்வாறு கூறினால், காணிமற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இங்குதான் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தினூடாக மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படுமெனக் கூறாமல், புதிய பொருளாதார சட்டத்தினூடு கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார முகாமைத்துவ அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படும் என்றும் எதிர்வரும் ஜூலை மாதமளவில், உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் கூறிவைத்துள்ளார்.

இங்குதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய மத்திய அரசை தன்வயப்படுத்தும் வகையில் திசை திருப்பும் முயற்சியை கனகச்சிதமாக மேற்கொண்டிருப்பது தெரிய வருகிறது.

ஆம், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் விளைவு 13ஆவது திருத்தச் சட்டமூலம் என்பது தெரிந்ததே. தற்போது இருக்கக்கூடிய ஆகக்குறைந்த அதிகாரப் பகிர்வு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இருந்தும் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துகின்ற எண்ணம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அறவே இல்லை.

தவிர, 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்துவேன் என்று கூறினால் கூட, சம்பந்தப்பட்டவருக்கு சிங்கள மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

அந்தளவுக்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை தனிநாட்டுக்கு இணையானதாகத் தென்பகுதி மக்களிடம் கருத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

எனவே 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தி, அதனூடாக மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் எனக் கூறாமல், புதிய பொருளாதார சட்டமூலம் மற்றும் உண்மை, நல்லிணக்கச் சட்டமூலத்தினூடு அதிகாரம் வழங்கப்படும் எனக் கூறி 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை அப்படியே மறைப்புச் செய்துள்ளார் ஜனாதிபதி ரணில்.

ஆக, நிலைமை இதுவெனும் போது அவர்கள் இன்னமும் திருந்தவில்லை என்பது மீண்டும் நிருபணமாகிறது.

# 40 நாட்களாக தீர்வின்றித் தொடர்கிறது பல்கலை கல்விசாரா ஊழியர் போராட்டம்

## நிர்க்கதியாகியுள்ள 2 இலட்சம் மாணவர்கள்

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பானது நேற்றுடன் 40 நாட்களை கடந்துள்ளது.

சம்பளத்தில் 15 வீத வற் வரி அறவிடப்படுகின்றமை மற்றும் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப் படாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள இந்த தொடர் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் காரணமாக 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இலங்கையின் பல்கலைக் கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்விகற்கும் சுமார் 2 இலட்சம்மாணவர்கள்நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலால் நிச்சயம் வெற்றிபெற முடியாது

## அஜித்.பி.பெரேரா ஆரூடம்

தற்போதைய ஜனாதிபதி சுயாதீனமாகவோ அல்லது வேறு தரப்பினருடன் இணைந்தோ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர்மேலும் தெரிவித்துள்ளதாவது,

ரணில் விக்கிரமசிங்கவை இந்த நாட்டுமக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். நிமால் லான்சா, ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன போன்றவர்களே ஜனாதிபதிக்கு தற்போது ஆதரவாக உள்ளனர்.

ஆனால் அவர்களிடம் இந்த நாட்டை கட்டியழுப்புவதற்கான கொள்கைத் திட்டங்கள் எதுவும் கிடையாது. ரணில் விக்கிரமசிங்க ஆதரவாளர்கள் எனக்கூறிக் கொள்பவர்கள் இந்த நாடு வீழ்ச்சிப்பாதைக்கு செல்வதற்கு வழிவகுத்தவர்கள் என்பதையும் அனைவரும் அறிவார்கள் என்றார். (ம-7,10)

# கோட்டாவிற்கு மக்கள் வழங்கிய மக்களாணை ஒக்டோபரோடு முடிவுறும்

### அதுவரையே ரணிலின் ஆட்சி என்கிறது - பெப்ரல் அமைப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின்19ஆம் திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களுக்கு மேல் அதிகரித்துக்கொள்ள முடியாது.அதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் உரியக் காலத்தில் நடத்தப்பட வேண்டும் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பெப்ரல் அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் பிரகாரம் மக்கள் ஆணையின்றி நாட்டின் ஜனாதிபதிக்கு 5 வருடங்களுக்கு அப்பால் சென்று ஜனாதிபதி பதவியை வகிக்கச் சட்ட ரீதியிலான அனுமதி இல்லை.

19ஆம் திருத்தத்துக்குப் பின்னர் நாட்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி 5 வருடங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் எந்த வகையிலும் 5வருடங்களுக்கு அதிக காலத்துக்கு ஜனாதிபதி பதவியை கொண்டு செல்ல முடியாது.

அத்துடன் அரசியலமைப்பின் 40ஆவது உறுப்புரையின் பிரகாரம். ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ள சந்தர்ப்பத்தில், அதற்காக பதில் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டால், ஜனாதிபதியாக பதவி வகித்த நபரின் பதவிக்காலம் முடிவடையும் வரைக்குமே பதில் ஜனாதிபதி ஜனாதிபதியாக பதவிவகிக்க முடியும்.

அதன் பிரகாரம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த எஞ்சிய காலப்பகுதி வரைக்குமே ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என்பது தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ஒருவருக்கு 5 வருடங்களுக்காக வழங்கப்பட்ட மக்கள்ஆணையை 6 வருடங்களுக்கு கொண்டு செல்ல எந்த வழியும் இல்லை. அரசியலமைப்பை எந்த அரத்தத்தில் ஆராய்ந்து பார்த்தாலும் அதே போன்று நீதிமன்ற தீர்ப்புக்களை பார்த்தாலும் தற்போதுள்ள ஜனாதிபதிக்கு, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்து, அவருக்கு எஞ்சியுள்ள காலம் மாத்திரமே ஜனாதிபதி பதவியை வகிக்க முடியும்.

எனவே ஜனாதிபதித்தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது கட்டாயமாகும் என்றார். (ம-7,10)

### சாதாரண தரப் பரீட்சை

# வினாத்தாள் மதீப்பீடு இன்றுடன் இடைநிறுத்தம்

இன்று பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் சாதாரண தர பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு பணி நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதன்படி நாடளாவிய ரீதியில் உள்ள 101 சாதாரண தர மீள் மதிப்பீட்டு நிலையங்களுக்கு முன் [illegible] ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இணைந்து மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் - அதிபர் சம்பள கொடுப்பனவை நீக்கியமையைக் கண்டித்தும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் இத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# மடுத்திருத்தல திருவிழாவிற்கான முன்னாயத்த கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவிற்கான முன்னாயத்த கலந்துரையாடல்நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலானது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார், மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், கடற்படை மற்றும் ராணுவ உயர்அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து,குடிநீர், மின்சாரம்,பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆடி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ஆம் தேதி திருவிழா நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

12

பல்லாண்டுகளாக இலங்கையின் அரசியல் அமைதியாக நடைபெற்று வந்ததினால் அவர் பரிபாலனத்தை கஷ்டமின்றி இயற்றுவதற்கு இடையூறுகள் ஏற்படமாட்டாதென்று எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் குடியேற்ற நாட்டுச் செயலாளராக இருந்த அறிவு மேதை சேர் எமர்சன் ரெனன்ற், அவரை நல்லவழியில் இட்டுச் செல்வார் என ஆட்சியாளர் எதிர்பார்த்தனர்.

சாதாரண அமைதிக் காலத்தில் ரொறிங்ரன் நிலைமையைச் சமாளித்திருக்க முடியும். ஆனால் இலங்கையின் அரசியலில் தோன்றிய நெருக்கடியான நிலை அடுத்த ஈராண்டுகளில் படுமோசமாயிற்று. அவரது முன்னேர் விட்டுச்சென்ற கஷ்டங்களின் காரணமாகவே ரொறிங்ரனின் ஆட்சி, தோல்வியில் முடிந்தது. எனினும் அவரது குணங்கள், எரியும் தீயில் நெய்யை வார்த்தது போலாயின.

ரொறிங்ரன் புத்தி சாதுரியமற்றவராகவும் கர்வம் நிறைந்தவராகவும், கடும் முற்கோபியுமாகக் காணப்பட்டார். இலங்கையில் பதவியேற்ற சொற்ப காலத்துக்குள் அவர் ஐரோப்பியருடனும் பறங்கியருடனும் பிணங்கிக்கொண்டார்.

**ஆள்பதி ரொறிங்ரனால் கொண்டு வரப்பட்ட புது வரிகள்**

கோப்பிச் செய்கையின் பூரண வெற்றி இலங்கையின் பொருளாதாரத்தில் புரட்சிகரமான விளைவுகளை ஏற்படுத்தி நின்றதை உணர்ந்த குடியேற்ற நாட்டுக் காரியாலயம் 1845 இன் இறுதியில் நாட்டின் இறை வருமானத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்குத் தீர்மானித்தது. எனினும் 1846 இன் இறுதியில், இலங்கையில் கோப்பிப் பிரதேசங்களை ஒரு பெரும் மந்தநிலை சூழ்ந்த பொழுது தான், குடியேற்ற நாட்டுக் காரியாலயம் புது வரிகளைச் செயற்படுத்தத் திட்டமிட்டது.

இப்புதுவரித்திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு ரொறிங்ரனையே சார்ந்தது. கோப்பித் தொழிலில் மிகவும் நெருக்கடியான ஒரு நிலை எழுந்தபொழுதுதான் இங்கிருந்த அவர், அத்தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கு கோப்பி முதலாளிகளும், வர்த்தகரும் ஏற்றுமதி வரிகளைக் குறைக்குமாறு கூக்குரலிடுவதைக் கண்டார்.

இதற்குச் செவிசாய்த்த அரசாங்கம், கோப்பியின் ஏற்றுமதி வரிகளை முற்றாக நீக்கியது. இவ்வரி ஒழிப்பினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம், £ 40,000 ஆகும். இந்த நட்டத்தை ஈடு செய்யும் பொருட்டு, அரசாங்கம் செலவினங்களைக் குறைத்தது. புது வீதிகளையும் புகையிரதச் சேவையையும் அமைப்பதற்கான திட்டங்களைப் பின்போட்டது. அதனோடு செலவுகளுக்கேற்ப வரவுகளைச் சமன்படுத்துவதற்கு அரசாங்கம், சில புது நேர்முகவரிகளையும் அறவிடக் கட்டளையிட்டது. முத்திரை வரி, நாய் வரி, துப்பாக்கி வரி, கடை வரி, வண்டி வரி எனப் பல வரிகள் 1848ஆம் ஆண்டு யூலை 1ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டன.

1848 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வீதிச் சட்டம் தனி இயல்புகளைக் கொண்டு விளங்கியது. எல்லா மக்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய நேர்முக வரியாக அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் அதனை அரசாங்கம் இயற்றியது.

18 இற்கும் 55 வயதுக்கும் உடபட்ட ஒவ்வொரு ஆண் மகனும் ஆறு நாள்களுக்குத் தெருக்களில் கட்டாய வேலை செய்ய வேண்டும் அல்லது மூன்று ஷிலிங் வரியிறுக்க வேண்டுமென்று அச்சட்டம் விதித்தது.

அது பெரும்பாலும் கோப்பித் தோட்டங்களுக்குப் புதுத் தெருக்களைத் திறக்கும் நோக்குடன்தான் இயற்றப்பட்டது. கண்டி விவசாயிகள், வீதிச் சட்டம், பழைய இராசகாரிய முறையினை மீண்டும் உயிர்ப்பிக்க அரசாங்கம் எடுத்த முயற்சியென நினைத்து, அச்சமும் பீதியும் கொண்டனர்.

அவர்கள் கோப்பித்தோட்டங்கள் திறக்கப்பட்டதை மிகவும் வெறுத்தனர். தோட்டங்களுக்கு அமைக்கப்பட்ட வீதிகள் கிராமிய வாழ்க்கைக்குப் பெரும் இடையூறுகளை விளைவித்தன, என எண்ணி வந்த மக்களை அத் தெருக்களில் கட்டாய சேவை புரியுமாறு அரசாங்கம் வற்புறுத்தியமை, எரியும் தீயில் நெய்யை வார்த்தது போன்றாயிற்று.

புது வரிகளும் வீதிச் சட்டமும் பிரகடனம் செய்யப்பட்ட அதே நேரத்தில் அரசாங்கம் ஆண்டுதோறும் தயாரிக்கும் நீலப் புத்தகத்திற்குத் தேவையான புள்ளி விபரங்களைச் சேகரிக்கும் நோக்கத்துடன் வீடு வீடாக நுணுக்கமான விசாரணைகளையும் ஆரம்பித்தது.

இங்கு விபரிக்கப்பட்ட பல்வேறு காரணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்ததன் பயனாக கிளர்ச்சிகள் ஏற்படலாயின. இது மாத்தளை, தம்புள்ளையில் பரந்த அளவிலும், கொழும்பில் சிறிய அளவிலும் நடைபெற்றது. கலகத்துக்கு கொங்காலே கொடபண்டா, வீரபுரன் அப்பு, குடாபொல தேரர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இம்மக்கள் போராட்டத்தை இராணுவத்தின் கடுமையான நடவடிக்கைகளால் ஆளுநர் ரொறிங்டன் முடிவுக்குக் கொண்டு வந்தார். முடிவில் குடாபொலபிக்கு துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்டார். வீரபுரன்அப்புவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. விசாரணைக்கு ஆளான கொங்காலே கொட பண்டாவை சாட்டையடித் தண்டனையுடன் நாடு கடத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவர்கள் மூவரும் இலங்கையின் தேசியவீரர் பட்டியலில் இடம்பெறுகின்றனர்.

**வீரபுரன் அப்பு பற்றி......**

வீரபுரன் அப்பு என அழைக்கப்படும் வீரகென்னாதிகே பிரான் சிசுக்கோ பெர்னாண்டோ இலங்கை வரலாற்றில் விடுதலைக்காகப் போராடிய குறிப்பிடத்தக்க ஒரு நபர். இவர் இலங்கையின் மேற்கே மொரட்டுவ நகரில் உயன பிரதேசத்தில் பிறந்தவர். தனது 13ஆம் வயதில் தான் பிறந்த இடத்தை விட்டு தனது வழக்கறிஞரான மாமனாருடன் இரத்தினபுரி சென்று அங்கு வாழ்ந்து வரலானார்.

தனது நாடு, மதம், இனம் என்பவற்றிற்கு தன்னை அர்ப்பணிக்க கருதிய அவர் தன் பெயரை புரன் அப்பு என மாற்றிக் கொண்டார். பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிற்கு எதிராக 1848 விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். கடப்பொல தேரரின் வழிகாட்டலில் மாத்தளை மெக்டோவல் கோட்டையைக் கைப்பற்றினார். எனினும் இப்போராட்டம் தோல்வியில் முடிந்தது. அவர் கைது செய்யப்பட்டு 1848 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 8ஆம் நாள் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டார்.

**கலகத்தின் நடத்தைபற்றி...**

கொழும்பில் "கொழும்பு ஒப்சேவர்" பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான கிறிஸ்தோப்பர் எலியட்டும் சில பறங்கிய நியாயதுரந்தரர்களும் இப் புதிய வரிகளுக்கெதிரான கிளர்ச்சியைக் கொழும்பில் தொடங்கி நடத்தினர்.

கொழும்பு மாவட்டத்தில் கடைவரியினாலும் முத்திரை வரியினாலும், வீதிச் சட்டத்தினாலும் முறையே பாதிக்கப்பட்ட வியாபாரிகள், நியாயதுரந்தரர்கள் (நீதவான்கள்), பாமர மக்கள் யாவரும் புது வரிகளைப் பலமாக எதிர்த்தனர்.

மக்கள் புது வரிகளைக் கட்டலாகாதென்றும், இன சமத்துவம், சர்வசனவாக்குரிமை எனும் ஜனநாயகக் கருத்துக்களுக்காக அவர்கள் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் கிறிஸ்தோப்பர் எலியட் தூண்டினர்.

மலைநாட்டில், கிளர்ச்சியின் முதல் அறிகுறி 1848 ஆம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற கமக்காரரின் சிறு ஆர்ப்பாட்டமாகும். 1848 யூலை 6 இல், சுமார் 4000 கமக்காரர் கண்டிக் கச்சேரியைச் சூழ்ந்து அரசாங்க முகவரைப் பேட்டி காணவேண்டுமெனக் கேட்டனர்.

வேறு பல ஆயிரக்கணக்கானவர்கள் நதியின் கடவைகளிலும் பாதைகளிலும் இராணுவத்தினரால் நிறுத்தப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர் தமக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்குப் பேச்சுவார்த்தை மூலம் பரிகாரம் பெறத்திடம் பூண்டவர்கள். அவர்கள் அரசாங்க முகவர் புளர் என்பவருக்கு ஒரு மனுப்பத்திரத்தைச் சமர்ப்பித்தனர்.

அப்பத்திரத்தின் ஆரம்பம் 1815 இல் எங்களை அடக்கியொடுக்கி எங்களுக்கு அநீதிகளை விளைவித்த காரணத்துக்காக நாங்கள் எங்கள் அரசனை அகப்படுத்தி அவனை பிரித்தானியரிடம் ஒப்படைத்தோம். சிங்கள அரசாங்கத்தின் கீழ் ஒரு பொழுதும் அனுபவியாத அநீதிகளையும், அடக்குமுறைகளையும் பிழைகளையும், இழப்புக்களையும் ஆண்டு தோறுமென் மேலும் நாங்கள் அனுபவிக்கச் செய்யப்படுகிறோம் போலத் தோற்றுகிறது." எனக் கூறிற்று.

முகவர் புளர், தான் விடயத்தை ஆள்பதி ரொறிங்ரனுக்கு அறிவிப்பதாக விடை பகர்ந்து விட்டுத் திரும்பிய பொழுது கூட்டத்தினர் பொலிஸ் படையினரைத் தாக்கிச் சிறு கலவரத்தை உண்டாக்கினர், நாலந்தையில் கமக்காரர் ஆன கொங்காலேகொட என்ற ஒரு தாழ் பிரதேசச் சிங்களவனை அழைத்துச் சென்று அங்கு கடப்பொல தேரரை கொண்டு அவனை அரசனென்று பட்டா பிஷேகம் செய்தனர்.

பின்பு ஒரு லட்சம் ஆயுதம் தாங்கிய சிங்களவர் தமது புது அரசனின் கீழ் மாத்தளையை நோக்கிப் புறப்பட்டனர். புது அரசனுக்கு புரன் அப்பு என்ற இன்னுமொரு தாழ் பிரதேசச் சிங்களன் முதல் அதிகாரராக நியமிக்கப்பட்டான். இதைப் போன்ற கலவரங்கள் பல மலைநாட்டுப் பட்டினங்களில் நிகழ்ந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 கிலோ...

குருநகர் பகுதியில் 22 கிலோகிராம் கேரள கஞ்சா பொலிஸாரினால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிராந்திய விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் குறித்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 10 பொதிகளில் 22 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,10)

## தபாலகங்கள்...

மணி வரை சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாடு முழுவதும் உள்ள அனைத்து தபால் நிலையங்களும் எதிர்வரும் 13ஆம் திகதி காலை முதல் மூடப்படும் என அதன் அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

அஞ்சல் துறை தற்போது பெரும் நெருக்கடியை சந்தித்து வரும் நிலையில், சுமார் 2,000 பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால், 4 ஆண்டுகளாக பதவி உயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஊழியர்கள் அதிக சிரமத்துடன் சேவை செய்ய வேண்டியுள்ளதுடன், மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,10)

## எதிர்வரும்...

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இம்முறை மக்கள் மத்தியிலும் பொது வேட்பாளர் விடயம் பேசப்படுகிறது.

எனவே, இம்முறை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவார். அதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், நான் சுயேட்சையாக போட்டியிடுவேன்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் சிவில் சமூகத்திற்கு மக்கள் ஆணையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அது தவறானது மக்கள் தங்கள் பிரதிநிதியாகவே பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளனர். ஆனாலும் மக்கள் தமக்கானதை தாமே தெரிவு செய்வார்கள்.

அவ்வாறு மக்களால் உருவானதே சிவில் சமூகம். அவர்களுக்கும் மக்களுக்கு என்ன தேவை என்பதனை தீர்மானிக்க, சொல்ல முடியும் என சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ம-7,10)

## யாழில்...

மான பவுசர் வாகனம், புன்னாலைக் கட்டுவன் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானது.

அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10)

## வட்டுக்கோட்டை...

பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பலே வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுத்து உள்ளதாகவும் வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

## ஐ.எம்.எப்பின்...

வது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் "மூன்றாவது கடன் தவணைக்கான, கலந்துரையாடலின் போது இலங்கையின் பொருளாதார கொள்கைகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்தப்படும்" என நிதி ராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் வெற்றிகரமான மீளாய்விற்கு அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தினால் மூன்றாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## 13ஆவது...

த்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"போருக்குப் பின்னரான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக அரசாங்கம் வட்டமேசை மாநாடு ஒன்றை நடத்த வேண்டும்.

அதேவேளை, சஜித்பிரேமதாஸவின் 13ஆவது அரசியலமைப்புத் திருத்த சட்டம் தொடர்பான உறுதிமொழியை அடுத்து, அரசாங்கம் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளும், குறிப்பாக தமிழ் குழுக்களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜே.வி.பியினரும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைபடுத்துவதற்கு ஆதரவளித்துள்ளனர்.

எனவே, இந்த திருத்தம் தொடர்பான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரது, நிலைப்பாட்டை கட்டியெழுப்ப உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் பாராளுமன்றத்தையும் வலியுறுத்துகின்றேன்.

மேலும், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறினால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)

## கனடாவில் விபத்து
# நயினாதீவு இளைஞன் பலி

(ஒன்ராரியோ)

கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தில் ஈழத்தமிழ் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நயினாதீவை சேர்ந்த 25 வயதான ஜெயகுமார் தனோஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நள்ளிரவில் வேகமாக பயணித்த வாகனம் கொங்கிறீட் தூணில் மோதுண்ட நிலையில் விபத்து ஏற்பட்டுள்ளதாக ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் 30.09.1985

வானகத்துள் 25.05.2023

## வைத்திய கலாநிதி
## அமரர் வேலாயுதம் சாரங்கன்

### திதி: பூர்வபக்க ஷஷ்டி 12.06.2024

மழை பொழிந்த ஓர் நாளில் பறவைகள் கூடு திரும்பும்
இளம் மாலைப் பொழுதில் இனிதாக நிகழ்ந்தது உன் ஜனனம்.

நீ தவழ்ந்து, தளர் நடை நடந்து, ஓடியாடி அன்னைக்கும் தந்தைக்கும் குழந்தையாய், சகோதரர்க்கு நற் தோழனாய், உன் ஆசான்களுக்கு நன்மாணாக்கனாய், வையகத்திற்கு இரட்சிப்பாளனாய் ஏற்றம் பல கண்டு தோளுக்கு மேல் வளர்ந்து அன்னைக்கும் தந்தைக்கும் தோள் கொடுப்பாய் என காத்திருந்த கணமொன்றில் சீதளச் சோளகமும் குயில்களின் கூவலும் நிறைந்த வைகாசி மாதப் பொழுதொன்றில் வணங்கிய தெய்வங்களுள் எதுன்னை காக்குமென திகைத்து திண்டாடி மன்றாட முன்னரே திடீரென நின்று போனதுன் இதயம்...

உற்றாரும் சுற்றாரும் கதறியழ உன் சக நண்பர்களும் கை பிசைய கண் நிறைந்த மருத்துவக் கண்காணிப்பையும் மீறி நீ வானகமேவினாய்.

ஆண்டு தான் ஒன்று...
மாறிடுமோ மறந்திடுமோ மனக் கவலை?
நீயில்லா வைத்தியசாலைப் பயணங்களும் நோய் நொடிகளும் எம்மைப் பதற வைக்கின்றன.
இன்றிருந்தார் நாளை இல்லாதிருப்பது நியதியெனினும் நல்லவர்க்கும் அல்லவர்க்கும் நன்மை மட்டுமே நாடிய நீயேன் சென்றாய்?
சொத்திருந்தும் புகழிருந்தும் சுற்றத்தார் இருந்தும் உன் இழப்பை எது ஈடு செய்யும்?
உன் மரணம் எமக்கு போதி மரம் தான்.
வைத்தியசாலையொன்றை அமைத்து சேவையாற்றுவதே உன் எண்ணம் என்றாய்.
உன் எண்ணத்தைச் செயலாற்ற உன் தந்தையும் உன் குடும்பத்தவரும் உன் உற்ற நண்பர்களும் முனைந்துள்ளார்கள் முனைந்து வருகின்றார்கள்.
கவிதையின் காதலன் நீ
உனது வாழ்க்கை விதியின் கைகளில் சென்ற பின்னும் உன் நண்பர்களால் கவிதை வடிவில் உன் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறது.
"இயற்கையோ இறைவனோ ஏதோவொன்றைக் கொடுக்காமல் இன்னொன்றைப் பறிப்பதில்லை. நமக்குத் தான் தொலைப்பது தெரிகிறது இருப்பது புரிவதில்லை..."
ஆம் இறைவன் பறித்தது உன்னை... கொடுத்தது உன் ஞாபகங்களை மட்டும்...
இறப்பு என்பது ஒரு நொடி...
உன் நினைவால் ஒவ்வொரு நொடியும் இறந்து கொண்டிருக்கிறோம்.
உனது அறையும், உன் ஆடைகளும், ஓய்வுக்குப் பின் நீ வாசிக்கவென்று சேகரித்த உன் புத்தகங்களும் உனக்காகவே காத்திருப்பது போல் உன்னை அறிந்து கொள்ளாத, உன்னைக் காக்கத் தவறிய வலியுடன் நீ நேசித்த நாமும்...
காகத்தின் வடிவில் நீ வருவாயென நித்தம் காகத்திற்கு உணவிடும் உன் அன்னை...
ஒவ்வொரு தடவையும் உன் பெயரையே முதலில் உச்சரிக்கும் உன் தந்தை...
என்ன சொல்லி ஆற்றிவிட முடியும் வெந்து கருகும் இதயத்தை?
காதலனாய், காவலனாய், தலைவனாய், தந்தையாய் அரவணைத்துக் காத்திருந்தாய் உன் மனையாளை...
சூடிய மல்லிகை வாடு முன் அவள் கோலம் கலைத்து ஏன் சென்றாய்?
நீ உணவிற்கு வரும் நேரங்கள், தேநீர் வேளைகள், பிறந்த தினங்கள் விசேடங்கள் அனைத்தும் உன் வருகையின்றி கடந்து போகின்றன...
நீ எழுதிய கவிதை, நீ அணிந்த ஆடை, நீ அமரும் கதிரை, உன் பொருட்கள் பொத்தி பாதுகாத்திட இயலாத உன் வாசனை எதிலும் நீ முழுமையாய் இல்லை...
கனவில் கூட இல்லை...
உனக்கு என்ன வண்ணம் பிடிக்கும்? என்ன உணவு பிடிக்கும்?
தெரிந்து கொண்டதேயில்லை...
தெரிந்து கொண்டு உன்னுடன் சேர்ந்து கொள்ள காத்திருக்கிறோம்... விரைவில் திரும்பி வா...

எமது மகன் **வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கனின்** ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் 12.06.2024 புதன்கிழமை (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருவதோடு அத்தருணம் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(0093)


## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (1176)

074 17 37 684


## நாடு முழுவதும் சுற்றி வளைப்பு
### 772 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருட்களுடன் 11 பெண்கள் உட்பட 772 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் 31 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 5 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-7.10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0578)

076 825 7716 (ஆகாஸ்)

## தவறிவிட்டது

கட்டைபறித்தான் கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியை சேர்ந்த யோகநாதன் கௌஷிகன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (2), வாகன அனுமதிப்பத்திரம் வங்கி காட்களுடன் ஒரு தொகை பணம் உட்பட கறுப்பு நிற ஆப்பிள் படமிடப்பட்ட மணிபேர்ஸ் கொடிகாமத்திற்கும் சாவகச்சேரி டச்சு ரோட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (1184)

தொடர்புகளுக்கு: 076 686 2585

## பணியாளர் தேவை

- கணக்காளர் ஆண்/பெண் (ஓய்வு பெற்றவர்கள், கணனி அறிவுடன் முன்அனுபவம்)
- அலுவலக உதவியாளர் (பெண்கள்)
- விற்பனைப்பிரதிநிதிகள் (ஆண்கள்)
- ETF/ EPF உட்பட மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

(C-577)

076 315 6470

## மணமகன் தேவை

யாழ் இந்து, 1993இல் பிறந்த அத்தம் நட்சத்திரம், செவ்வாய் 7, கி.பா. 17 உடைய அரச தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (1181)

077 944 1075

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0579)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## விமலம் திருமண சேவை

யாழ்/ கனடா சர்வதேச சேவை தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் மணமகன் / மணமகள் உள்ளன. (779)

+ 1437 244 6737, + 1647 657 1347 (கனடா) 077 240 9276 தாயகம்

## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா? உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம். (C-0579)

V2 TRAVELS 0768226244

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0579)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1187)

Golden Real Estate (pvt) Ltd
077 029 4164,
077 329 4130, 077 294 1521


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.